Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தில் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303.K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670.
FAX-222 3214. email-del-smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 17 (18.07.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 289

# இடைக்கால நிர்வாக திட்டவரைபு; புலிகளிடம் வெஸ்பேர்க் ஒப்படைப்பு!

## விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை

(கிளிநொச்சி)

**அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்குப் புகுதிகளுக்கான, இடைக்கால நிர்வாக அலகு யோசனை, நேற்றுக்காலை விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம், நோர்வே விசேட தூதுவர் வெஸ்பேர்க்கினால் கையளிக்கப்பட்டது.**

கொழும்பிலிருந்து தரைவழியாக, அரசின் நிர்வாக அலகு யோசனையை நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் கிளிநொச்சிக்கு எடுத்து வந்தார். அவர், விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில், அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனிடம், இந்த நிர்வாக அலகு யோசனையைக் கையளித்தார்.

இதையடுத்து - நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கிற்கும், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையில், சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடல் இடம்பெற்றதாகவும் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின்போது- பேசப்பட்ட விடயங்கள் குறித்தோ, திட்ட வரைபின் உள்ளடக்கம் பற்றியோ தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.



திட்டவரைபுடன் வந்த வெஸ்பேர்க்கை வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்.

## புலிகளின் பதிலை அரசாங்கம் உடனடியாக எதிர்பார்க்கவில்லை

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறுகிறார்

இடைக்கால நிர்வாகம் பற்றிய நகல் திட்டயோசனை இறுதியானது அல்ல, விடுதலைப் புலிகள் அதனைப் பரிசீலித்து அவர்களும் தங்கள் யோசனைகளை முன்வைப்பார்கள் என்று- அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் பத்திரிகையாளர் மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

அங்கு, அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

உடனடியாக விடுதலைப் புலிகளிடமிருந்து பதிலை நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் அதனை நன்கு பரிசீலிப்பதற்குக் கால அவகாசம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



செயலகத்திடது மட்டுமில்ல, சமாதானத்திட ஆயுளையும் நீடிக்க வெல்லோ வேணும்...

## சமாதான செயலக ஆயுட்காலம் மேலும் இரு ஆண்டுகள் நீடிப்பு!

சமாதானச் செயலகத்தின் ஆயுட்காலத்தை - மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் பிரேரணை ஒன்றை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் சமர்ப்பித்தார். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அமைக்கப்பட்ட இந்தச் சமாதான செயலகத்தின் ஆயுட்காலத்தை, ஜனவரி 2004 இலிருந்து டிசம்பர் 2005 வரை நீடிப்பதற்கான யோசனையைப் பிரதமர், அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தார்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா, சமாதான செயலகம் இதுவரை ஆற்றிய பணிகள் குறித்த விபரங்களை, அரசாங்கம் அமைச்சரவையில் முழுமையாகச் சமர்ப்பிக்க முன்வந்தால், அதன் ஆயுட்காலத்தை இரண்டாண்டு காலத்துக்கு நீடிக்கும் யோசனையை, தான் எதிர்க்கப்போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பரப்பை அங்கீகரிப்பது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்!

### பிரதமரிடம் ஜெனரல் ரெலவ்சன் நேரில் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பரப்பை அங்கீகரிப்பது குறித்து, அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்று, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ட்ரைகேவ் ரெலவ்சன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டுள்ளார்.

மூன்று நாட்கள் வன்னியில் தங்கியிருந்து, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து - விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் தளபதிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர்- நேற்றுமுன்தினம் மாலை, கொழும்பு திரும்பிய ஜெனரல் ரெலவ்சன், இது தொடர்பாக விளக்கம் அளிப்பதற்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார்.

நேற்று மாலை அலரி மாளிகையில் இடம்பெற்ற இச்சந்திப் பின்போது, அமைச்சர்களான - மிலிந்த மொறகொட, ஜி.எல்.பீரிஸ் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ ஆகி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இராணுவ உளவாளி ஒருவர் பலி!

(திருகோணமலை)

திருகோணமலை- உப்புவெளியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில், இராணுவ உளவாளி ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

உப்புவெளி மூன்றாம் கட்டையில், நேற்றிரவு 7.45 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் அப்துல் வகாப் என்பவரே மரணமானவராவார்.

திருகோணமலை நகரிலிருந்து- மூன்றாம் கட்டைப் பகுதியிலுள்ள தனது வீட்டுக்கு, இவரும் இவரது நண்பரும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால்- இவர் அந்த இடத்திலேயே மரணமானார். மற்றைய நபர் காயமடைந்த நிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கனடா கார் விபத்தில் தமிழ் தம்பதியினர் பலி!

(ரொரான்ரோ)

கனடா, ரொரான்ரோ நகரில் நேற்றுமுன்தினம் இரவு 11.00 மணியளவில் இடம்பெற்ற கார் விபத்தொன்றில், இலங்கைத் தமிழர்களான, தம்பதியினர் பலியாகினர். பொன்னம்பலம் நமசிவாயம், மதிவதனி நமசிவாயம் ஆகியோரே, மரணமானவர்கள் எனத் தெரியவருகிறது.

தனது மனைவியை வேலைத்தளத்திற்கு அழைத்துச் சென்றுகொண்டிருந்தபோதே- நமசிவாயத்தின் கார், மற்றுமோர் காருடன் மோதி, விபத்துக்குள்ளானதில் இவர்கள் இருவரும் ஸ்தலத்திலேயே பலியாகினர். மற்றைய காரில் வந்தவர்களுக்கு காலில் மட்டுமே சிறு காயம் ஏற்பட்டது.

ரொரான்ரோவில் பாதுகாப்பு ஊழியராகப் பணிபுரியும் நமசிவாயம், மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றில் பணியாற்றும் தனது மனைவியை, அவரது வேலைத்தளத்திற்கு கொண்டுசென்று விடுவதற்காக காரில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தபோதே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இத் தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திடம் பிரிட்டன் கோரிக்கை

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையை, உடனடியாக அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டும் என, பிரிட்டிஷ் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினமிரவு- அலரி மாளிகையில், பிரதமரைச் சந்தித்த தூதுவர், தற்போதைய அரசியல் நிலைமை தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக, பிரதமர் செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில் -

அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ மீண்டும் ஒரு போருக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறான ஏற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால், சர்வதேச உதவிகள் உடனடியாக நிறுத்தப்படும் என்றும் பிரிட்டிஷ் தூதுவர், பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

நிரந்தர சமாதானப் பேச்சுவார்த்

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891 071 349999
071 348888 074 - 512666 - 01 - 360290
(சி -975)

## அல்லிப்பளையில் முன்பள்ளி திறந்துவைப்பு

(பளை)

அல்லிப்பளை ,கிராமத்தில், முன்பள்ளியொன்று கடந்த வாரம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த யுத்த கால வன்செயல்களினால் முற்றாக அழிந்துள்ள இந்த கிராமத்தில் - பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினர், முன்பள்ளி மேம்பாட்டு நிறுவனத்தினருடன் இணைந்து - இந்த முன்பள்ளியைத் திறந்து வைத்தனர்.

இதனையிட்டு மனமகிழ்வை தெரிவித்த இப்பகுதி மக்கள், அல்லிப்பளை சீ.சீ.த.க. பாடசாலை இதுவரை திறந்து வைக்கப்படுவதற்கு பூர்வாங்க நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படாதமையை இட்டு விசனமும் தெரிவித்தனர்.

இப்பாடசாலை திறக்கப்பட்டாமையினால், இப்பகுதிச் சிறார்கள் மூன்று மைல் தொலைவிலுள்ள பாடசாலைக்கு நடந்து செல்ல வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (115)

# பொங்கலில் ஈடுபட்ட சமயம் பணம் அபகரிக்க முயற்சி!

### உஷாரடைந்த உறவினரால் திருடன் அகப்பட்டான்

கோவில் பொங்கலுக்கென வங்கியிலிருந்து பணம் எடுத்து வந்து வைத்துவிட்டு, பொங்கல் விழாவில் கலந்துகொண்டவர்களின் பணம் அடங்கிய கைப்பை - மோட்டார் சைககிளில் வந்த இரு இளைஞர்களினால் அபகரிக்கப்பட்ட சம்பவம், சுதுமலை அம்மன் கோவிலடியில் இடம்பெற்றது. இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

லண்டனிலிருந்து பல வருடங்களுக்குப் பின் தமது சொந்த ஊருக்கு வந்த குடும்பத்தினர், தமது குல தெய்வமாகிய சுதுமலை வற்றாப்பழை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் காலை பொங்கல் நடாத்த தீர்மானித்து, அதற்காக மானிப்பாயிலுள்ள வங்கியொன்றிலிருந்து பணத்தை எடுத்துவந்தனர்.

இதை நன்கு அவதானித்த இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளிலில் பின் தொடர்ந்து வந்துள்ளனர்.

பணம், பாஸ்போட், கைத்தொலைபேசி என்பன அடங்கிய கைப்பையை வானில் வைத்துவிட்டு, பொங்கல் நடத்திக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களில் ஒருவர் நைசாக வானின் கதவைத் திறந்து பணப்பையை அபகரித்துக்கொண்டு, ஆயத்தமாக நின்ற மோட்டார் சைக்கிளில் தப்பியோட முயன்றார்.

இதனை, தற்செயலாக அவதானித்த உறவினர் ஒருவர் உடனடியாக ஓடிச்சென்று அந்த இளைஞனை மடக்கிப் பிடித்தார். பின், அந்த இளைஞன் ஊர் மக்களின் உதவியுடன் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மற்றைய நபர் தப்பிச் சென்றுவிட்டார். (91,101)

## கூட்டுறவுச் சங்க ஊழியருக்கு சம்பள உயர்வு

பச்சிலைப்பள்ளி பல நோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு, இந்த மாதம் தொடக்கம் சம்பள உயர்வு வழங்கப்படவிருக்கிறது. இந்தச் சம்பள ஏற்றச் சுற்றறிக்கை 2000 ஆம் ஆண்டு தை மாதம் அனுப்பப்பட்டபோதிலும், இடம்பெயர் வாலும் தொடர் தொழிற்படு நட்டத்தில் சங்கம் இயங்கியமையினாலும் இந்த சம்பளவுயர்வு வழங்கப்படவில்லை.

ஆனால், தற்போது சங்கம் சொந்த இடத்தில் இயங்கிக்கொண்டிருப்பதனால், இந்தச் சம்பள உயர்வு இந்த மாதம் முதல் வழங்கப்படவிருப்பதாக, சங்க உபதலைவர் சி.இராமலிங்கம் தெரிவித்தார். (115)

## ஊரகக்கிளை உறுப்பினர்களுக்கு அழைப்பு

வலி.தென்மேற்கு பிரதேச, தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக்கிளைகளின் உறுப்பினர்களை இன்று பி.ப. 3 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள கலந்துரையாடலிலும், பிரதேசக் கிளைத் தெரிவிலும் கலந்துகொள்ளுமாறு, வலி.தென்மேற்குப் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல்

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேசங்களுக்கான கூட்டம் நாளையும், நாளைமறுதினமும் இடம்பெறவுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ்ப்பாணக் கோட்டத்திற்கான கூட்டம் - நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு, யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

நல்லூர் கோட்டத்திற்கான கூட்டம் - ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறும்.

இக்கூட்டங்களில், அந்தந்தக் கோட்டங்களுக்குரிய ஊரகக் கிளை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## சந்திப்பு

கோப்பாய் பிரதேசத்துக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களின் நிர்வாகிகளுக்கான சந்திப்பு- இன்று 4 மணிக்கு இடம்பெறவுள்ளதாக, அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.


# மாநகரசபை, யாழ்ப்பாணம்

## கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்குறிப்பிட்ட கட்டட அமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் '7' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

*கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி :– 31.07.20003 பி.ப 3.00 மணி*
*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :– 06.08.2003 பி.ப. 12.30 மணி*
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி :– 06.08.2003 பி.ப 2.30 மணி*

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிடப்பட்டு, கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

| | கேள்வியின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம், VAT உட்பட |
|---|---|---|---|
| 1) | கல்வியங்காட்டு பொதுச்சந்தை புனரமைப்பு வேலை பகுதி - I | 40,000/= | 1,200/= |
| 2) | கல்வியங்காட்டு பொதுச்சந்தை புனரமைப்பு வேலை பகுதி - II | 30,000/= | 1,200/= |

மாநகரசபை.
யாழ்ப்பாணம்.
17.07.2003

(சி-1246)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

திறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த
பாறை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
THE LORD OF THE RINGS
(சி-1338)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



10.30, 2.30, 6.30.9.30
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன
(சி-1137)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள GJ தொடர் இலக்கமுள்ள CD 125 BENLY மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, 114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (T.P -2789) (421).

### சுதாஸ் கலைச்சோலை

தனிப்பாவனையிலுள்ள MAZDA JAPAN CAR மற்றும் சகலவித கமராக்களும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். குறைந்த விலையில் பெறலாம்.

சுதாஸ் கலைச்சோலை, 182, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-1247)



## தேடப்படுகிறார்

1987 ஆம் ஆண்டிலிருந்து 13 வருடங்கள் களுத்துறைச் சிறையிலிருந்து தற்போது விடுதலையாகியுள்ள கந்தையா சிவப்பிரகாசம் என்பவர் தனது வீட்டை அடையாளங்காண முடியாது இருக்கிறார்.
இவரைக் கண்டவர்கள் கீழ்வரும் முகவரிக்கு அறியத்தரவும்.

மெ. சின்னையா,
பேரம்பலம் வீதி,
பெரியமாவடி,
சாவகச்சேரி.

(சி-1234)

## புற்றுநோயாளர்கள் கவனத்திற்கு

யாழ். நகரிலுள்ள சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்கிற்கு இம் மாதம் 22 ஆம், 23 ஆம் திகதிகளில் Dr.P.வாணி அவர்கள் வருகை தரவுள்ளார். பதிவுகளை முற்கூட்டியே செய்யவும்.

தொடர்புகளுக்கு:
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக், அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்,
08, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(சி-1244)

# பணிநிலை வேண்டுகை

ஆயபகுதியில் கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ்கள், பிற தகைமைச் சான்றிதழ்கள் என்பவற்றுடன் 2003.07.25 ஆம் நாள் நேரில் வருகை தரவும்.

பணிநிலை : எழுதுநர்

கல்வித்தகைமை : க.பொ.த (உ/த) வணிகப்பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(சி-1243)

நடுவப் பணியகம்,
ஆயப்பகுதி,
கிளிநொச்சி.

# புலனாய்வு மாநாட்டில் அமெரிக்க அதிகாரி; ஒஸ்ரின் மீது ஜனாதிபதி சந்திரிகா பாய்ச்சல்!

## இனி இப்படி நடக்கக்கூடாதெனவும் எச்சரிக்கை

கடந்தவாரம் கொழும்பில் நடைபெற்ற அரசாங்கப் புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் - அமெரிக்கப் புலனாய்வு அதிகாரியொருவர் கலந்துகொண்டமைக்கு, ஜனாதிபதி சந்திரிகா கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, நேற்று முன்தினம் - பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோவை அழைத்துப் பேச்சு நடத்திய ஜனாதிபதி சந்திரிகா - இவ்வாறான உள்நாட்டுப் புலனாய்வு மாநாடுகளில் வெளிநாட்டவர்கள் கலந்துகொள்வது, ஒரு நாட்டின் இறைமையைப் பாதிப்பதுடன், இராணுவ இரகசியங்கள் வெளியே செல்வதற்கும் வழிவகுத்துவிடும் எனத் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் இவ்வாறு நடைபெறும் புலனாய்வுச் சேவைகளுக்கான கூட்டங்களில், வெளிநாட்டவர்கள் எவரும் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது எனவும், ஜனாதிபதி சந்திரிகா - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவுக்கு எச்சரித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களுக்குக் கூடத் தெரியாத வகையில், இந்த உயர் மாநாட்டில் குறிப்பிட்ட அமெரிக்க உயரதிகாரி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகரும், தற்போதைய அரசாங்கத்தின் புலனாய்வுச் சேவைகள் சம்பந்தமான பணிகளை முன்னெடுப்பதற்காக நியமிக்கப்பட்டவருமான, மெரில் குணரட்ண தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க உயரதிகாரி - விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணி பற்றியும், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய இராணுவ மையங்கள் பற்றியும் கேள்விகளை எழுப்பியது தெரிந்ததே.

## தெஹிவளை-கல்கிசை நகரசபைத் தலைவர்மீது துப்பாக்கிச் சூடு!

(கொழும்பு)

தெஹிவளை - கல்கிசை நகர சபைத் தலைவர் மீது, நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் கொழும்பில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். எனினும், நகரசபைத் தலைவர் காயங்கள் எதுவுமின்றித் தப்பித்துக்கொண்டார்.

இவர், பொலிஸாருடன் சேர்ந்து போதைவஸ்து கடத்தல்வோருக்கு எதிராகவும், பாதாள உலக கோஷ்டியினருக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதாள உலக கோஷ்டியினரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கலாம் எனவும், பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

## கண்டிச் சிறைச்சாலைக்குள் பெண்மீது பாலியல் வல்லுறவு!

### மன்னிப்புச்சபை விசாரிக்கிறது

வாரியப்பொல பொலிஸ்நிலையத்திலும், கண்டிச் சிறைச்சாலையிலும் வைத்து பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட நந்தினி ஹேரத் என்ற பெண் தொடர்பாக, சர்வதேச மன்னிப்புச்சபை மற்றும் பொது அமைப்புக்கள் கூடுதல் கவனம் எடுத்துவருகின்றன.

கடந்த வருடம் மார்ச் 8 ஆம் திகதி திருட்டுக் குற்றச்சாட்டின்பேரில், நந்தினி ஹேரத் கண்டிச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார். இவர் வாரியப்பொல பொலிஸநிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியாலும், மேலும் ஆறு பொலிஸாராலும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார்.

கண்டிச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட பின்னரும், அவர்மீது சிறைக் காவலர்கள் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தி வந்தனர்.

இது தொடர்பாக, உயர்நீதிமன்றத்தில் இப்பெண் புகார் செய்தபோதிலும், கைதான பொலிஸ் அதிகாரி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதுபோன்று வெலிகடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பெண் அரசியற்கைதிகள், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்படுவதாகச் செய்திகள் வெளியானது குறிப்பிடத்தக்கது.

## தமிழகத்திலுள்ள 60, 000 அகதிகளை சட்டப்படி அழைப்பதற்கு நடவடிக்கை!

### யு.என்.எச்.சி.ஆர் உடன் இலங்கை அரசாங்கம் முயற்சி

இந்தியாவில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் சட்டவிரோதமான முறையில் இங்கு வருவதனால், அவர்களுக்கான உதவிகளை உரிய முறையில் செய்யமுடியாதிருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள 111 அகதிமுகாம்களில், சுமார் அறுபதாயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். இவர்கள் கட்டம் கட்டமாக சட்டவிரோதமான முறையில் தாயகம் திரும்பி வருவதனால், அவர்களை இங்கு தங்கவைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யமுடியாமல் இருப்பதாகவும், பாதுகாப்பற்ற முறையில் கடல்வழியாக வரும்போது, ஆபத்துக்களை அவர்கள் எதிர்நோக்குவதனால், யு.என்.எச்.சி. ஆரின் உதவியுடனேயே இங்கு அழைக்கப் போவதாகவும், இலங்கை அரசாங்கம் - இந்திய அகதி முகாம்களின் பொறுப்பதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இது குறித்து - யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் - இந்தியாவிலுள்ள இலங்கை அகதிமுகாம்களில் துண்டுப்பிரசுரங்கள் வழங்கி வருவதாகவும், சட்டரீதியாக அகதிகளை தாயகத்துக்கு அனுப்புவது தொடர்பான ஆலோசனைக் கூட்டங்களை நடத்திவருவதாகவும் தெரியவருகிறது.

## இடைக்கால நிர்வாகத்தில் அதியுயர் சபை; விரைவில் கொழும்பில் ஆலோசனைக் கூட்டம்!

புதிய திட்டவரைபின்படி இடைக்கால நிர்வாகசபைக்குள் அமைக்கப்படவுள்ள அதியுயர் சபைக்கு - நிதி மற்றும் பாதுகாப்புத் தவிர ஏனைய அதிகாரங்கள் மட்டுமே - தற்போது வழங்கப்படவுள்ளதாக, அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள அதியுயர் சபைக்கு, முஸ்லிம் கட்சிகளும் சேர்த்துக்கொள்ளப்பட்டு, உரிய பொறுப்புக்கள் தங்களுக்கும் வழங்கப்படவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகவும், அமைக்கப்படவுள்ள அதியுயர் சபைக்குரிய நிதி மற்றும் பாதுகாப்புத்தவிர முழுமையான பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் வழங்கப்படுவது தொடர்பாகவும், ஆலோசனைக் கூட்டமொன்று விரைவில் கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும் அரச தரப்பிலிருந்து தெரியவருகிறது.

(01)

## சுனில் தாப்ரூ கொலைபற்றிய அறிக்கை ஜனாதிபதியிடம்!

### சமர்ப்பிக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

தெஹிவளை பொலிஸ்நிலைய புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி, சுனில் தாப்ரூவின் கொலை தொடர்பான அறிக்கை இன்னும் இரு தினங்களுக்குள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

சுனிஸ் தாப்ரூவின் கொலை தொடர்பாக உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா பொலிஸ் திணைக்களத்திடம் கோரியிருந்தார்.

இது தொடர்பான விசாரணைகள் முடிவடைந்த நிலையில், இன்னும் இரு தினங்களுக்குள் விசாரணைகளின் அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக, பொலிஸ்மா அதிபர் ஆனந்தராஜா தெரிவித்துள்ளார். (01)

## பளை நூலகத்திலிருந்து 7500 நூல்கள் மாயம்!

(பளை)

கடந்த யுத்த காலத்தில், பளை நூலகத்தில் 7500 இற்கு மேற்பட்ட நூல்கள் காணாமற்போயுள்ளன.

யுத்த நடவடிக்கைகளின்போது பல முக்கிய நூல்களை இழந்துள்ளதாக, நூலகர் திருமதி சு.தாமோதரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அவற்றுள் - கலைக்களஞ்சியம் முழுத்தொகுதியும் காணாமற்போய்விட்டதாகத் தெரிவித்த அவர் - புதிய கலைக்களஞ்சியம் நூலைப் பெற, ஒரு இலட்சம் ரூபாவரை தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

(115)

## மூவாயிரமாக இருந்த விடுதலைப் புலிகள் பதினாறாயிரமாக இன்று வளர்ந்துவிட்டனர்!

### ஐ.தே.கவே காரணமென்கிறார் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் மூவாயிரம் உறுப்பினர்களே இருந்தார்கள். ஆனால், இன்று ஐ.தே.கட்சி அரசின் ஆட்சிக்காலத்தில் - விடுதலைப்புலி உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினாறாயிரமாக உயர்வடைந்துள்ளது. இந்த உயர்வுக்குக் காரணம் - ஐ.தே. கட்சி அரசு - தமிழீழ விடுதலைப் புலிகளின் கையாட்களாகச் செயற்படுவதே என்று, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம், தங்கொடவிலவில் நடைபெற்ற - பொ.ஐ.முன்னணியின் கட்சிக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசும்போது,

ஐ.தே.கட்சி அரசாங்கமே, விடுதலைப் புலிகள் தங்களை வளர்த்துக்கொள்வதற்குக் கூடிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுத்துள்ளது எனவும், இவ்வாறான வாய்ப்புக்களே பல தரப்பட்ட இளைஞர்கள் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொள்ளக் காரணமாக அமைந்தது எனவும் குறிப்பிட்டார்.

போர் நிறுத்தம் ஆரம்பமானதன் பின்னர், புலிகள் தமது படைப் பலத்தை மட்டுமல்ல, ஆயுதபலத்தையும் பெருக்கிவிட்டார்கள். இவை எல்லாவற்றையும், ஐ.தே.முன்னணி அரசாங்கம் கைகட்டிப்பார்த்துக் கொண்டிருக்கிறது எனவும், தினேஷ் குணவர்த்தன மேலும் கூறினார்.

### சிப்பாய் பற்றியும் பேசப்பட்டது!

விடுதலைப் புலிகள் தடுத்து வைத்துள்ள கடற்படைச் சிப்பாயை விடுவிப்பது பற்றியும் தாம் பேச்சுவார்த்தை நடத்தியதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளருடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இது பற்றிக் கலந்துரையாடப்பட்டதாக கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார்.








கடற்போக்குவரத்துப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயச் சென்ற கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலவ்சனை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை வரவேற்பதை முதற்படத்திலும், பேச்சில் கேணல் சூசையுடன் லெப். கேணல் செழியன், லெப்.கேணல் சிறிராம், மற்றும் புலித்தேவன் ஆகியோர் பங்கேற்பதை இரண்டாவது படத்திலும், முல்லைத்தீவு கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுடன் ரெலவ்சன் சந்தித்துப் பேசுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சீலன், ஆனந்தின் தியாக வரலாறு என்றும் பெருமிதத்துடன் போற்றப்படும்

## நினைவுத்தூபி திறப்பு விழாவில் மாவை சேனாதிராஜா

தமிழ்த் தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக, கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்னர் இடப்பட்ட அத்திவாரத்தில்தான் நாம் இன்று நின்றுகொண்டு குரல் கொடுக்கின்றோம். அதுவே எமக்கு ஆதரவாகவும் இருக்கின்றது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அல்லாரையில் லெப்.சீலன், ஆனந்த் ஆகியோர் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி திறப்புவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது, கலந்துகொண்டு பேசும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு, அவர் தொடர்ந்து உரையாற்றும்போது -

20 ஆண்டுகள் மறைந்தாலும்- லெப்.சீலன், ஆனந்த் ஆகியோரது தியாகவரலாறு இன்னும் பெருமிதத்துடன் நோக்கப்படுகிறது. அது என்றும் இவ்வாறே போற்றப்படும். சீலனது பெயரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணி ஒன்று இருப்பது சிறப்பானதொரு அம்சமாகும்.

சீலன், ஆனந்த் போன்ற ஆயிரம் ஆயிரம் வீரர்கள் தங்களது உயிர்களை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது அவர்களுக்காக அல்ல. இந்தத் தமிழ் மண்ணுக்காகவும், இந்தத் தமிழ் மண்ணைச் சார்ந்த மக்களுக்காகவும், தமிழ்த் தேசத்திலே தமிழ்மக்களுடையே ஆட்சி நடைபெறவேண்டும் என்பதற்காகவும், தங்களுடைய இன்னுயிர்களைக் கொடுத்தார்கள்- இந்தத் தியாகிகள்.

எங்களுக்காக அவர்கள் விட்டுச் சென்ற அர்ப்பணத்தை, அந்தத் தியாகத்தை நாங்கள் ஒருபோதும் மறந்து விடக்கூடாது என்பதைத்தான் நன்றியுள்ள மக்களாகிய நாம் உணர்ந்து, இந்த இடத்திலே அவர்களை நினைத்து, உறுதி எடுத்துக்கொள்வதற்காக ஒன்றுகூடியிருக்கிறோம்.

மாவீரன் சீலனின் பெயரில் உருவான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி - தங்களைப் போராட்டத்தில் அர்ப்பணித்தது மட்டுமல்ல, எதிரிகளால் வெற்றிகொள்ள முடியாதளவிற்குப் பலம்பொருந்தியதாக வளர்ந்து நிற்கின்றது.

20 ஆண்டுகளுக்குமுன் - வேகம் கொண்ட இந்தப் போராட்டத்தில், இன்றுவரை ஆயிரக்கணக்கான போராளிகள் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். அந்தத் தியாகத்தின் மேல்தான், தமிழ்த் தேசத்தின் விடுதலையைக் கட்டியெழுப்புவதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

இன்றைய போராட்டம் மனித குலத்தின் இயல்பான போராட்டம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் தங்கள் ஆட்சியைச் சொந்த மண்ணிலே நிலைநாட்டுவதற்கு, விடுதலைப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவது பாரம்பரியமானதே.

இன்றைக்குச் சர்வதேச சமூகம், விடுதலைப் புலிகளுடன்தான் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு, பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று ஜனாதிபதி சந்திரிகாவிடமோ அல்லது பிரதமரிடமோ வலியுறுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் போராட்ட வீச்சுக்களும், தந்திரோபாயங்களும், வெற்றிகளுமே காரணம் எனத் தெரிவித்தார்.

# மிதிவெடியால் பாதிப்புற்றோருக்கு சுயதொழில் முயற்சிக் கடன் உதவி!

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தால், யுனிசெப் அனுரணையுடன் - மிதிவெடியால் பாதிக்கப்பட்டோருக்கான சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக முப்பது பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நல்லூர், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் ஆரம்பத்திலும், தொடர்ந்து ஏனைய பிரிவுகளிலும் இத்தகைய சுயமுயற்சிக் கடன் வழங்கப்படும் என, சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, இந்த வருட ஆரம்பத்திலிருந்து இதுவரையான காலப் பகுதியில், வெடிபொருட்களில் சிக்கிக் குடாநாட்டில் ஏழுக்கும் அதிகமானோர் கால்களை இழந்துள்ளதுடன், பதினைந்திற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். முதல் காலாண்டுப் பகுதியிலேயே வெடிபொருட்களினால் ஏற்பட்ட பாதிப்புகள் அதிகமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (11)

## சின்னஞ்சிறு செய்திகள்

### வெளியீட்டு விழா

அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கம் எழுதிய 'செய்யுளியலும் அணியியலும்' நூல் வெளியீட்டு விழா, அளவெட்டி மகாஜனசபை வாசிகசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில்- கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, அருட்புலவர் பண்டிதர் க.ஆறுமுகம், முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

நூலை வெளியிட்டு வைத்து, முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கவிஞர் சோ.பத்மநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

### கைதடிச் சந்தியில் சமுர்த்தி வங்கி

(மீசாலை)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கான இரண்டாவது சமுர்த்தி வங்கி, எதிர்வரும் 23 ஆம் திகதி கைதடிச் சந்திக்கு அண்மையிலுள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் திறந்து வைக்கப்படவுள்ளது. (25)

### ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கடல்நீர் உயிர்வள தொழில்நுட்பப் பாடநெறி ஆசிரியர்களுக்கான செயலமர்வு, யாழ். பல்கலைக்கழகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்றும், நாளையும் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரை இடம்பெறும். இச்செயலமர்வில் - மேற்படி பாடநெறியினைக் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கலந்துகொள்ளுமாறு இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தச் செயலமர்வில் ஆசிரியர்களுக்கான கைநூல்களும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# திலீபன் மருத்துவ சேவையினரால் ஜூனில் 12000 பேருக்கு சிகிச்சை!

தமிழீழ சுகாதார சேவையினால் நடத்தப்படும் தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால், கடந்த ஜூன் மாதம் மட்டும், 12,485 நோயாளர்களுக்கு - மாங்குளம், ஐயன்குளம், நைனாமடு, கற்சிலைமடு, அளம்பில், பூநகரி, ஆழியவளை, கறுக்காய்க்குளம், நெடுந்தீவு, புளியங்குளம் ஆகிய பத்து நிலையங்களிலும் சிகிச்சைகள் வழங்கப்பட்டன.

இவர்களில் வைரஸ் காய்ச்சலினால் 1670 பேரும், மலேரியாக் காய்ச்சலினால் 532 பேரும், சுவாசப் பாதைத் தொற்றினால் 2205 பேரும், நெருப்புக்காய்ச்சலினால் 3 பேரும், சிறுநீர்த் தொற்றினால் 163 பேரும், பல்நோயினால் 377 பேரும், தோல் நோயினால் 493 பேரும், சுவாசத் தொற்றினால் 108 பேரும், கண் நோயினால் 236 பேரும், வயிற்றோட்டத்தினால் 174 பேரும், வலிப்பினால் 64 பேரும், குடற்புண் தொற்றினால் 966 பேரும், இதயநோயினால் 156 பேரும், இடுப்பு வலியினால் 1452 பேரும், காயங்களினால் 1049 பேரும் என - மொத்தமாக 12,485 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

அத்துடன் - திலீபன் மருத்துவ சேவையினரால், மருத்துவ நிலையங்களை அண்டியுள்ள மக்களுக்கான சுகாதார விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், சுகாதார கல்வியூட்டல், சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், கிராமத் தரிசிப்புகளை மேற்கொள்ளல் எனப் பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (108)

### செல்வச்சந்நிதியில் சொற்பொழிவு

(வடமராட்சி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம கலை, பண்பாட்டுப் பேரவையினால் நடத்தப்பட்டுவரும் வாராந்த நிகழ்வில், இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு "வழிகாட்டிய வாதவூர் வண்டு" என்னும் விடயம் பற்றிச் சித்தாந்த பண்டிதர் சி.வேலாயுதம் சொற்பொழிவு நிகழ்த்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (17)

# மாணவருக்கு தலைமைத்துவப் பயிற்சி பாடசாலைகளில் வழங்கப்படவேண்டும்

## மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய சின்னஞ்சூட்டு விழாவில் அதிபர்

(மட்டுவில்)

இன்றைய இளைஞர்களே நாட்டின் நாளைய தலைவர்களாக வளரப்போகிறவர்கள். வீட்டையும், நாட்டையும் மிகப்பொறுப்புடன் நிர்வகிக்க வேண்டிய கடப்பாடுடையவர்கள். அவர்களுக்குத் தலைமைத்துவம் சம்பந்தமான போதிய பயிற்சிகள், மாணவப் பருவத்திலேயே வழங்கப்படல் வேண்டும். இதற்காகத்தான் பாடசாலைகளில் இலக்கிய மன்றங்கள், விளையாட்டு இல்லங்கள் போன்றன உருவாக்கப்பட்டு, மாணவர்களை அவற்றில் ஈடுபடச்செய்து, அவர்களின் ஆற்றல்கள் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்கள் போன்ற பதவிகள் உருவாக்கப்பட்டு, அவை திறமையினடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பதவிகள்மூலம் சிறுவயதிலேயே மாணவர்கள் தலைமைத்துவப் பண்பையும், ஆளுமையையும் பெற்று - நற்பிரஜைகளாக வெளிவருகின்றனர்.

இவ்வாறு, மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயத்தில் இடம்பெற்ற மாணவர் தலைவர், வகுப்புத் தலைவர்களுக்குச் சின்னஞ்சூட்டு விழாவிற்குத் தலைமைவகித்து, உரைநிகழ்த்திய மேற்படி பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரைநிகழ்த்திய அவர் -

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு, ஏனைய மாணவர்கள் முன்னிலையில் சின்னங்கள் சூட்டிக் கௌரவிக்கும்போது, அவர்கள் மிகவும் உற்சாகமாகத் தமது பணிகளைச் செய்வர். ஏனைய மாணவர்களும் இந்தப் பதவிகளைப் பெற வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு, அதற்குரிய தகுதிகளைப் பெறுவதற்கு முயற்சிக்கத் தூண்டும் எனக் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலயத்தில் இந்த ஆண்டே, இந்த வகையான சின்னஞ்சூட்டும் வைபவம் முதன் முறையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

விரைவில் இந்தப் பாடசாலையில் பழைய மாணவர் சங்கமொன்று உருவாக்கப்பட்வுள்ளதாகவும், அதிபர் செ.சிவஞானம் மேலும் தெரிவித்தார்.

## வாழ்க வளமுடன்




### முதலாவது அகவையில்



பெயர் : சி.சாம்பவி
முகவரி : 46, நொத்தாரிஸ் வீதி, அரியாலை.

### ஐந்தாவது அகவையில்

பெயர் : வ.இராஜநர்த்தனி
முகவரி : நாவற்காடு, அச்சுவேலி.



### ஐந்தாவது அகவையில்



பெயர் : வ.இராஜநர்த்தனன்
முகவரி : நாவற்காடு, அச்சுவேலி.

### ஆறாவது அகவையில்

பெயர் : க.அச்சுதன்
முகவரி : கிராம்புவில், சாவகச்சேரி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------
முகவரி :------------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்






# சுயதேவைக்கும் சீதனத்துக்கும் கைகொடுத்தது

**யாழ்.குடாநாட்டில் கயிறு திரிக்கும் கைத்தொழில் பெண்களின் பொழுதுபோக்காகவும், வருமானம் பெறும் வழியாகவும் இருக்கிறது. கணவன் உத்தியோகத்திலுள்ளவராக இருந்தாலும், குடும்பத்திற்கு, வருமானம் சம்பாதிக்கும் தொழிலாகவும், சுயதேவை நிறைவுக்கு உறுதுணையாகவும் இது இருக்கிறது என்கிறார்கள் ஏ.வி.ஒழுங்கை, கொழும்புத்துறையைச் சேர்ந்த பாமிலா, ஸ்ரான்லி, ஜென்சி ஆகியோர். அவர்களுடனான சந்திப்பிலிருந்து...**

எங்களுடைய இடத்தைப் பொறுத்தளவில், இந்தக் கயிறு திரிக்கிற தொழில், ஒரு பிரதானமான குடிசைக் கைத்தொழிலாகவே இருந்து வருகிறது.

எங்கட ஊரில இருக்கிற எல்லாப் பெண்களும், கயிறு திரிக்கிற கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

நாங்களும் ஓரளவுக்குப் படித்துவிட்டு, பாடசாலையை விட்டு வெளியேறியதும், வீட்டில் சும்மா இருக்காமல் இந்தக்



கயிறு திரிக்கிற தொழிலைச் செய்வமெண்டு செய்றோம். இங்க படித்து முடித்தவர்கள் மட்டுமன்றி, பாடசாலைக்குச் செல்கின்ற பிள்ளைகளும், பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்தவுடன், கயிறு திரிக்கத் தொடங்கிவிடுவார்கள். அந்தளவுக்கு கொழும்புத்துறை ஆனந்தன்வடலி மக்களோடு பின்னிப் பிணைந்த தொழிலாக இது இருந்துவருகிறது.

வீட்டிலும் கஷ்டம், அதால நாங்கள் இதைச் செய்யத் தொடங்கினம். குறைந்தது ஐயாயிரம் ரூபா முதலுடன் இந்தத் தொழிலைச் செய்தால் ஆரம்பத்தில் 5 அல்லது 6 மாதங்களுக்குள், போட்ட முதலை மீளவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

கயிறு திரிக்கிற பொறி 3500 ரூபாவுக்கு வாங்கலாம். தேங்காய் உரித்தமட்டை கடல் நீரில் ஊறப்போட்டது - ஒரு கீறு ஒரு ரூபாவுக்கு வாங்கினால், அதைக் கையாலதான் அடித்துத் தும்பாக்கி எடுத்து - அதைக் கயிறு திரிக்கிற பொறியில் இரண்டு பக்கமும் கொழுவிவிட்டு, ஒருவர் அதைச் சுற்ற, மற்றைய இரண்டு பேரும் கொஞ்சக்கொஞ்சத் தும்பாகக் கொடுத்துத் திரித்து, பின்னர் ஒன்றாகச் சேர்த்து இரண்டு





தினம். ஆனால், இப்ப அடையாள அட்டை உள்ளவர்கள் அதைக் காட்டிவிட்டுப்போய் தும்புகள் எடுத்துக்கொண்டு வரலாம்.

கடலுக்குள் ஊறப்போட்ட மட்டைகளை எடுக்கவிடாத காலப்பகுதியில், பச்சை மட்டையைக் கையில் அடிச்சுத்தான் தும்பெடுத்துக் கயிறு திரிச்சனாங்கள். இப்ப கடலுக்குள்போய் ஒரு கீறுமட்டை - ஒரு ரூபாப்படி வாங்கி அடிக்கடி தும்பு எடுக்கிறம். சகோதரிகளாகச் சேர்ந்து இதைச் செய்கிறம். தங்கச்சிமார் பாடசாலையால் வந்தவுடன், வேலை செய்வினம் . இது ஒரு பொழுதுபோக்காகவும் இருக்கிறது.

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் எல்லா வீடுகளிலும் இந்தக் கைத்தொழில் செய்கிறாங்கள். கணவன் உத்தியோகம் செய்தாலும், குடும்பப் பெண்கள் கட்டாயம் இந்தத் தொழில் செய்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். 150 ரூபாவுக்கு மட்டை வாங்கி, அடித்துக் கயிறாகத் திரித்து 300 ரூபாவுக்கு மேல் விற்கலாம். வண்டிலில் வந்து வாங்கிக்கொண்டு போவார்கள். அந்தக் காசில் சீட்டுக்கட்டி, அந்தக்காசை எடுத்து நகைவாங்கி, அதையே சீதனமாகக் கொடுக்கிற அளவுக்கு இங்க இருக்கிற எல்லாப் பெண்களினதும் நிலைப்பாடாக இருக்கிறது.

தரைப்பாதை திறந்தவுடன், எங்கட தொழிலில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கு. தென்பகுதியிலிருந்து கயிறு வந்தால், இதை விற்க விலைகுறைச்சுக் கேப்பினம். அதே நேரத்தில் எங்களிடமே கயிறுவாங்கி, அதைச் சாயத்தில் தோச்சுப் போட்டு, அதைக் கொழும்புக் கயிறு என்று சொல்லியும்

## இந்தக் குடிசைக் கைத்தொழில்தான்

இழைக் கயிறாக்குவம். மூன்று பேர் அதற்குத் தேவை. எங்களுக்குக் கூலி கொடுக்கக் கட்டாது. அதால இன்றைக்கு ஒரு ஆளுக்கு நூறுமட்டை தும்பு திரித்துக்கொடுக்க உதவினால், அவ பிறகு அடுத்தமுறை மற்றவவுக்கு நூறுமட்டை தும்பு திரிக்க உதவுவா. இப்படிச் சேர்ந்துதான் செய்வம்.

கயிறு திரித்துக் கிடைக்கிற வருமானத்தைக்கொண்டு, எங்களுடைய தேவைகளை நாங்களே நிறைவு செய்யக்கூடியதாக இருக்கிறது.

இப்ப நாங்கள் கயிறு திரிக்கிற தும்புகள், 1995 ஆம் ஆண்டு நாங்கள் இடம்பெயரேக்க கடலுக்குள்ள தாட்ட மட்டையிலிருந்து, அடித்த தும்புகள்தான். நாங்கள் இங்க வந்து மீளக் குடியமர்ந்த பிறகு கடற்கரைக்குச் செல்லப் படையினர் தடுத்து விற்பார்கள்.

இடம்பெயர்வுக்கு முன்னர் நாங்கள் உழைத்ததுபோல இப்ப உழைப்பில்லை. ஏனென்றால், கடற்கரையின் எல்லாப் பகுதிக்கும் நாங்கள் போகமுடியாது. அதால குறிப்பிட்ட பகுதியில மட்டும்தான், மட்டை தாட்டு ஊறவைத்து எடுக்கலாம். எல்லாப் பகுதிக்கும் விட்டால் நிறைய மட்டைதாட்டு எடுக்கலாம். எங்கடை குடிசைத் தொழிலின் வீழ்ச்சிக்கும், வருமானக் குறைவுக்கும் படையினரின் தடைவிதிப்புத்தான் காரணமாக இருக்கிறது.

*சந்திப்பு: உஷா, கலானந்தி*

## நட! பெண்ணே நட!!

பெண்ணே!
நட
இன்று மட்டுமல்ல
நாளையும் நம்முடையது
தான்
நட!
வீரமகள்
உன்னுடைய
விலாசத்தை
விசாரிக்கும் வரை
நட!
பாதங்கள் நடக்க
தயாராக இருந்தால்
எந்தப் பாதையும்
மறுப்புச்
சொல்லாது!
வைராக்கிய மகள்
உன்னுள் வளர்ந்து
விட்டால்
வரதட்ணை அரக்கன்
உன்னை வதைக்கான்
எனவே நட!
தோல்வியும் உனக்கொரு
தூண்டு கோலாகும்
வெற்றி உன்னைச்
சுற்றி
வட்டமடிக்கும் வரை
விடாமல்
நட!
பெண்ணே
உன் கால்கள்
ஓடிவரும் பாதையில்
தடையாகும்
கற்கள்
தூள் தூளாகும்
நட!
வாழ்வை
உராய்வு
நிறைந்த
பாதையென்று
உறங்கிப் போகாதே
உராய்வுகளே
பாதத்திற்குதவிகள்
அதனால்
நட!
தூக்கத்தில் நீ
இருந்தால் - பூமி
உனக்குப் படுக்கையாகும் - நீ
விழித்து நட
அது உனக்கொரு
பாதையாகும்!



வீ.தர்சினி.

## பூரி - கறி



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கோதுமை மா | - 1/4 Kg |
| தேங்காய் | - பாதி |
| உருளைக்கிழங்கு | - 1/2 Kg |
| வெங்காயம் | - 50 g |
| மரக்கறி எண்ணெய் | - 1/2 L |
| பெருஞ்சீரகம், கடுகு | - அளவாக |
| தனிமிளகாய்த் தூள், உப்பு | - அளவாக |
| பெருஞ்சீரகத்தூள் | - அளவாக |
| கறிவேப்பிலை | - அளவாக. |



### செய்முறை

முதலில் பூரி செய்வதாயின், மாவை அரிக்கவும். அதனுள் அளவாக உப்புச் சேர்த்துக் கொள்ளவும். தேங்காயைப் பிழிந்தெடுத்து, மாவுக்குள் கொஞ்சம் கொஞ்சமாகவிட்டு நன்றாகக் குழைக்கவும். பின் சிறிதளவு எண்ணெயும் சேர்த்துக் குழைத்த பின், அரை மணித்தியாலம் அல்லது ஒரு மணித்தியாலயம் மூடிவைக்கவும். பின்னர் - Board இல் போட்டு உருட்டி வட்டமாகவோ அல்லது முக்கோணமாகவோ விரும்பிய வடிவில் வெட்டி, எண்ணெயைக் கொதிக்க வைத்து, நன்றாகக் கொதித்ததும் வெட்டிய துண்டுகளை எண்ணெயில் போட்டு, பொன்னிறமாகப் பொரிக்கவும் (கொதிக்கும் எண்ணெயைக் கரண்டியால் பூரிமேல் ஊற்றினால் பொங்கிவரும்). இதற்கு கறி செய்வதற்கு உருளைக்கிழங்கை அவித்துச் சுத்தஞ்செய்து, சிறுசிறு துண்டுகளாக வெட்டி, தாச்சியினுள் சிறிதளவு எண்ணெய் விட்டுக் கடுகினைப் பொரியப் போடவும். பின் அதற்குள் வெங்காயத்தையும் போட்டுப் பொரிக்கவும். ஓரளவு பொரிந்ததும் கறிவேப்பிலையையும், வெட்டிய உருளைக்கிழங்கையும் சேர்த்துக் கிளறவும். உப்பு, மிளகாய்த்தூள் என்பவற்றைச் சேர்த்த பின், தேங்காயைப் பாலையும் விட்டு நன்றாகத் தூள் மணம் போகும்வரை அவிக்கவும். இறக்கும்போது பெருஞ்சீரகத்தூளைப் போட்டு, இறக்கிப் பூரியுடன் சேர்த்துக் காலை உணவாகப் பரிமாறலாம்.

# ஒரு உயிர் உருவாகும் அந்த அதிசயம்!



பொதுவாகவே பிரசவத்தை ஒரு பெண்ணுக்கு மறு ஜென்மம் கிடைப்பதுபோல என்று, நாம் வர்ணிப்பதுண்டு. ஆனால், அந்தக் 'கடினம்' கூட குழந்தையைப் பிரசவிக்கும் கட்டத்தில்தான். மற்றப்படி, தனக்குள் பொதிந்திருக்கும் அந்த குட்டி உயிரைப் பாதுகாப்பது, அதனுடைய வளர்ச்சிக்குத் தேவையான, சத்தான உணவு வகைகளைச் சாப்பிடுவது, வயிற்றுக்குள் குழந்தை புரளும் அந்தச் சுகத்தை அனுபவிப்பது என்று மிகமகிழ்ச்சிகரமான ஒரு காலகட்டம் அந்தப் பத்து மாதங்களும்.

ஆனால், கருவாக உருவான காலம்தொடங்கி, பத்து மாதம் கழித்துப் பிறப்பது வரையிலான சிசுவின் அந்தப் பத்துமாதப் பயணத்தை, உலகின் மிக ஆபத்தான பயணம் என்று சொன்னால், அது மிகையில்லை.

கரு முட்டையுடன் விந்தணு இணைந்து ஒரேயொரு கலமாக உருவாகும் கரு. பல கலங்களாக வளர்ந்து, பாதுகாப்பான ஒரு நிலையை அடைந்து, குழந்தையாகப் பிறப்பது வரைக்கும், அது பலவிதமான இயற்கைச் சவால்களையும், கருக்கலைப்புப் போன்று தற்போது கிளம்பியிருக்கும் செயற்கை அபாயங்களையும் கடந்து, குழந்தையாக ஜனிப்பது என்பது ஒன்றும் சாதாரண விடயமல்ல.

ஒவ்வொரு மாதமும், நம்முடைய சினைப் பையிலிருந்து ஒரேயொரு சினைமுட்டை மாதச் சுழற்சிமுறையில், பலோப்பியன் ரீயூப் என்ற கருக்குழாய் வழியாகக் கர்ப்பப் பையை நோக்கி வெளிவருகிறது. உடலுறவுமூலம் ஆணிலிருநது வெளிவரும் கோடிக்கணக்கான விந்தணுக்களில் ஒரேயொரு விந்தணுக்களுடன் இந்தச் சினை முட்டை இணைய, கருவாக உருவாகிறது. இதெல்லாம் கருக்குழாயின் பாதி வழியிலேயே நடக்கிறது. சுமார் ஆறு நாட்கள் வரைக்கும் பலோப்பியன் குழாயிலேயே தன்னைப் பல கலங்களாகப் பெருக்கிக்கொண்டு வளர்கிறது. (இயற்கைமுறையில் தான் பலோப்பியன் குழாயில் கரு உருவாகிறது. ரெஸ்ட் ரியூப் போன்ற செயற்கைமுறையில் உருவாக்கப்படும் கருக்களுக்கு இது பொருந்தாது).

ஆறாம் நாளன்று கரு, பலோப்பியன் குழாயிலிருந்து மெல்லத் தன் பயணத்தைத் தொடங்கி, கர்ப்பப் பைக்குள் நுழைகிறது. 'இனி இங்குதான் நாம் வளர்வோம்...' என்று தானாகவே முடிவு செய்ததுபோல, அது கர்ப்பப் பைக்குள் தனக்கான பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்கிறது.

அப்போது கரு எந்தவிதமான உறுப்புகளும் வளர்சியடையாமல், வெறும் கலங்களில் குவியலாக இருக்கும். இந்த நிலையில், அது எப்படி, எதனால், ஏன் கருப்பப் பைக்குள் தன் இடத்தைத் தேடித் தேர்வுசெய்கிறது என்பது, இன்னுமே ஆராய்ச்சிக்குரிய விடயம்தான். இது ஏதோ இரசாயன நிகழ்வு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

எது எப்படியோ, கரு, காப்பப் பைக்குள் தனக்குப் பொருத்தமான ஒரு இடத்தைத் தேர்வுசெய்து, அந்த் இடத்தில் வளரத் தொடங்குகிறது.

தனக்குள் பொதிந்துகொள்ளப்போகும் கருவை எதிர்கொள்ளக் கர்ப்பப் பையும் தன்னை முன்னதாகவே தயார்படுத்திக் கொள்கிறது. எப்படி என்றுதானே கேட்கிறீர்கள். ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் தொடங்கிய நாளிலிருந்து கணக்கெடுத்துவரும் 13, 14 மற்றும் 15 ஆம் நாட்களை நாம் **Ovulation Period** என்கிறோம். இந்த **Ovulation Period** இல்தான், சினைப் பையிலிருந்து சினைமுட்டை வெளியேறுகிறது. அது வெளியேறும் சமயத்தில், சினை முட்டையைச் சுற்றியிருந்த சினைக்கூட்டில் (**Follicle**) இருநது சில ஓமோன்கள் வெளியேறத் தொடங்குகின்றன. இந்த ஓமோன்கள் கர்ப்பப் பையின் உட்புறத்தை, கருவைத் தாங்குமளவுக்கு மெத்மெத்தென்று ஒரு படைபோல வளர்ச்சியடையச் செய்கின்றன. அந்தமுறை கருத்தரித்தால், கர்ப்பப் பை அதேநிலையில் இருக்கும். கருத்தரிக்காமல் போனால், அந்த 'மெத்' என்ற படை, மாதவிலக்கு என்ற பெயரில் வெளியேறிவிடும், சினைமுட்டையுடன்தான்.

ஜெ.ஃப்கோட் என்கிற மகப்பேற்று மருத்துவர், இதை எப்படி வர்ணிக்கிறார் பாருங்கள்.

கருத்தரிக்காத ஏமாற்றத்தால், கர்ப்பப் பை கண்ணீர் கசிகிறதாம்.

கர்ப்பப் பையை அடைந்த கரு இப்போது வெகுவாக வளர்ச்சி நிலையிலிருக்கும். ஆரம்பத்தில் கருவுக்கும், தாய்க்கும் இடையே தொப்புள்கொடிப் பந்தம் எல்லாம் இருக்காது. நாளடைவில்தான் இந்த இணைப்பு ஏற்படுகிறது. கர்ப்பப் பையை அடைந்ததும், அதையொட்டியிருக்கும் கருவின் பகுதிகள் வேகமாக, சற்றே அடர்த்தியாகப் படரத் தொடங்கும். இப்படிப் படரும் கலங்கள் கருவைக் கர்ப்பப் பையில் நன்றாக வேரூன்றி நிற்கச் செய்யும். இதை மருத்துவ ரீதியாக **Implantation** என்கிறோம். கருத்தரித்ததும், சினைப் பையில் வெடித்த, சினை முட்டைக்கூடு 'கொர்ப்பஸ் லூட்டல் சிஸ்ட்' என்கிற ஒரு நீர்க்கட்டியாக மாறுகிறது. தாய்க்கும், கருவுக்கும் இடையே தொப்புள்கொடி இணைப்பு ஏற்படும் வரைக்கும், கருவின் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்களை கொடுத்து, இதுதான் பாதுகாக்கிறது. பின்புதான் தாயிடமிருந்து நேரடியாகச் சத்துகள் கருவுக்குக் கிடைக்கிறது.

ஆரம்பத்தில் ஒரேவிதமாக இருக்கும் கருவின் கலங்கள், எண்ணிக்கையைப் பன்மடங்கு பெருக்குகின்றன. இதில் குறிப்பிட்ட கலம்தான் - கைகளாகவோ, கால்களாகவோ, மிருதுவான மூளை நரம்புகளாகவோ, கடினமான எலும்புகளாகவோ வளரும் என்று சொல்லமுடியாது. இதில் எந்தக் கலமும் வளர்ச்சியடைந்து, உடலின் எந்த உறுப்பாகவும் உருவாகலாம். அப்படிப்பட்ட அரிய சக்தி இந்த ஆரம்பக்கட்டக் கலங்களுக்கு உண்டு.

அது எப்படி - இந்தக் கலங்களால் மட்டும் இப்படித் தனைத் தானே பலவிதமான உறுப்புகளால் மாற்றிக்கொள்ள முடிகிறது என்பது, அறிவியல் புதிராகவே இன்னும் தொடர்கிறது. இப்படிப்பட்ட கலங்களை வளரச்செய்து, மனிதனுக்குத் தேவையான மாற்றுச் சிறுநீரகமாகவோ, இதயமாகவோ வெவ்வேறு உறுப்புகளைப் பிற்காலத்தில் உருவாக்க முடியுமா என்கிற ரீதியிலும்கூட, ஆராய்ச்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

விசேட சக்திகொண்ட இந்த ஆரம்பக்கட்டக் கலங்கள் நாளாக நாளாக வெவ்வேறு விதமான கலங்களாக உருவெடுக்கும். இவற்றில் ஒவ்வொன்றும் - இதயம், சிறுநீரகம், நரம்புகள், தோல், எலும்புகள் என்று ஒவ்வொரு உறுப்புக்கும் எனப் பிரிந்து, அந்த உறுப்புகள் வளர்ச்சியடையத் தொடங்கும். ஒவ்வொரு கலங்களும் இப்படி அதனதன் வேலைகளைப் பிரித்துக்கொள்ளும் இந்தச் சமயத்தில்தான் கருவுக்கு வைரஸ் கிருமிகள், மருந்து, மாத்திரைகள் மற்றும் சுற்றுப்புறச் சூழலால் பாதிப்புக்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம். சில குழந்தைகளின் இதயம், எலும்புகள் போன்ற உறுப்புகள் பாதிப்படைவது எல்லாம் இந்தக்கட்டத்தில்தான்.

எல்லா உறுப்புகளுமே குறிப்பிட்டளவுக்கு வளர்ச்சியடைந்த பின்பு, கருவுக்குக் கடினம் குறைகிறது. இந்தப் பாதுகாப்பான கட்டத்தைக் கரு அடைய ஐந்து மாதங்கள் வரையாகும். முக்கியமான சில பாதிப்புக்களுக்கு ஐந்து மாதங்கள் வரைதான் கடினம். ஆனால், ரூபெல்லா போன்ற சிலநோய்த் தொற்றுக்களால், குழந்தைகளுக்குப் பிரசவம் வரைகூட ஆபத்து ஏற்படலாம்.

8 - 9 வாரங்களில் கருவுக்குக் குட்டிக்குட்டி விரல்கள் முளைத்திருப்பதை ஸ்கான் செய்து பார்த்தால் தெரியும். 10 - 12 வாரங்களில் ஸ்கான் செய்து பாாத்தால், கருவுக்கு அந்த சிறியளவிலேயே ஏறக்குறைய ஒரு முழு வடிவம் கிடைத்துவிடும்.

கர்ப்பப் பையின் ஒரு ஓரத்தில் கரு வளர்ந்துகொண்டிருக்க, இன்னொரு பக்கம் அதைச்சுற்றித் தண்ணீர் இருக்கும். கரு வளரவளர, இந்தத் தண்ணீர் குழந்தையைச் சுற்றியிருக்கும். இந்தத் தண்ணீரைத்தான் குழந்தை பிறக்கும்போது, நாம் பன்னீர்க்குடம் என்று சொல்கிறோம். கருவைப் பல கட்டங்களில் ஒரு ஸ்பொஞ் போல சுற்றிநின்று பாதுகாப்பது இந்தப் பன்னீர்க்குடம்தான்.

கர்ப்பப் பையில் கரு வேர் பிடித்த பகுதிதான், நஞ்சு. அதாவது, **Placenta** ஆக உருவாகிறது. இது தாய்க்கும், சேய்க்கும் இடையிலான நஞ்சுக்கொடி என்கிற பாலமாக உருவாகிறது.

உள்ளேயிருக்கும் கரு சும்மா இருப்பதில்லை. பன்னீர்க் குடத்துக்குள் மிதந்தபடி குஷியாக விளையாடிக் கொண்டிருக்கும். ஸ்கான் செய்து பார்த்தால், இது நன்றாகத் தெரியும். குதிப்பது, நடனமாடுவது என்று ஒரே விளையாட்டுத்தான். ஸ்கான் செய்து பார்க்கும்போது, டொக்டர்களான நாங்கள் இதை இரசித்துப் பார்ப்போம். கர்ப்பப் பையில் கருவால் ஏற்படும் இந்த அசைவுகளை முதன்முறையாக கருவுற்ற பெண்களால், ஐந்தாம் மாதத்திலிருந்துதான் உணர முடியும். சில பெண்கள் இந்த அசைவுகளை 'வயிற்றுக்குள் பட்டாம்பூச்சியொன்று மென்மையாக, தனது இறக்கைகளை வீசிப் பறப்பதுபோல இருக்கிறது..." என்பார்கள். இன்னும் சிலரோ, "கடிகார சத்தம்போல ஏதோவொன்று வயிற்றுக்குள் அவ்வப்போது கேட்கிறது" என்பார்கள். இப்படி ஒவ்வொரு தாயும் அவரவர் உணர்வுக்கேற்றவாறு, அந்த அனுபவத்தை விபரிப்பார்கள். இது எப்படியோ, அது அந்தத் தாய்க்கு முழு அளவில் சந்தோஷத்தை அள்ளித்தரும்.

இப்படி 3 - 8 மாதங்கள்வரைக்கும் குழந்தை கர்ப்பப் பைக்குள் மிகவும் சுறுசுறுப்புடன் அசையும். சில பெண்கள் "மிகவும் அசைவு இருக்கிறது" என்று பயந்துவிடுவது உண்டு. ஆனால், இது சாதாரணமானதுதான். பிரசவ நாள் நெருங்க நெருங்க கர்ப்பப் பைக்குள் தண்ணீர் குறைந்துவிடும். இதனால், அந்தச் சமயம் குழந்தையின் அசைவும் வெகுவாகக் குறைந்துவிடும். அதனால், பயப்படத் தேவையில்லை.

மருத்துவ கலாநிதி வி.கிருஷ்ணகுமாரி

## இரும்பு விளக்கு ஏற்றலாமா?

**நம் வீட்டில் பூசை அறையில் எரியும் விளக்கு, வெள்ளியினால் செய்ததாக இருக்கவேண்டும் அல்லது பித்தளை, மண் விளக்குகளை ஏற்றவேண்டும். எவர் சில்வர் விளக்கு ஏற்றக்கூடாது. ஏனென்றால், வெள்ளி என்பது சுக்கிரன். செல்வத்துக்கு அதிபதியான கோள் சுக்கிரன். சுக்கிரனை இழுக்கும் சக்தி வெள்ளிக்கு உண்டு. ஒரு வீடு செல்வச் செழிப்பாகவும், வளமாகவும் இருக்கவேண்டுமானால், சுக்கிரனின் ஈர்ப்பு அங்கு இருக்கவேண்டும். அந்த சக்தி வெள்ளிக்கு இருப்பதால், பூசை அறையில் வெள்ளிப் பொருட்களை உபயோகிப்பது மிகவும் நல்லது. அதற்குப் பதில் இரும்பினாலான பொருட்களை உபயோகிக்கக்கூடாது. ஏனென்றால், சனி கிரகத்தை ஈர்க்கும் சக்தி இரும்புக்கு உண்டு. சனியின் ஆதிக்கத்தில் இருப்பவர் எப்பொழுதும் மந்தபுத்தியுடன், சோம்பேறியாகத் திரிவர் எனவும் கூறப்படுகின்றது. ஒரு நிமிடம் - இவற்றையெல்லாம் நம்புவதா இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, இவை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கக்கூடியதா என்ற கேள்வியும் எழுகின்றதல்லவா...?**

## மஞ்சளின் மருத்துவக் குணங்கள்

- ❖ மஞ்சள் தூளை நீரில் குழைத்து மூட்டுக்களின் மீது பூசி வந்தால் மூட்டு வலி குணமாகும்.
- ❖ பச்சை மஞ்சளை சாந்தாக அரைத்து விஷப் பிராணிகள் கடித்த இடத்தில் பூசினால் விசம் நீங்கும்.
- ❖ தினமும் மஞ்சள் தேய்த்து குளிப்பதை வழங்கமாகக் கொண்டவர்களுக்கு தொற்று நோய் ஏற்படாது. தோல் நோய், சொறி, சிரங்குகள் ஆகியன வராது. இரத்தமும் சுத்தியாகும்.
- ❖ பெண்கள் மஞ்சளை தொடர்ந்து முகத்துக்கு பூசி வந்தால் அவர்களுடைய முகம் அழகாகக் காட்சியளிக்கும்.
- ❖ உடலின் வேர்வையினால் ஏற்படும் துர்நாற்றத்தை நீக்கும்.
- ❖ நாளாந்தம் உணவில் சேர்த்துக்கொள்ளும்போது வயிற்றுப் பொருமல், உடல் நோ என்பனவற்றைக் குணமாக்குகின்றது.
- ❖ மஞ்சள் தூளுடன் நெய் சேர்த்துக் குழைத்து தொண்டைமேல் பூசிவர தொண்டைப் புண் குணமாகும்.
- ❖ எதிர்பாராத விதமாக தீக் காயங்கள் ஏற்பட்டு விட்டாலோ, சுடுநீர் நீராவி ஆகியவற்றால் ஏதேனும் பொக்களங்கள் ஏற்பட்டாலோ சிறிதளவு வெங்காயச் சாற்றுடன் மஞ்சள் தூளை சேர்த்து குழைத்துப் பூசினால் குணமாகும்.

## சில பயனுள்ள குறிப்புகள்...

- ☞ **தடிப்பான துணிகளைத் தைக்கும்போது, ஊசி முறிந்துவிடாமல் இருக்க, துணியில் தைக்கும் பகுதியில் சிறிதளவு சவர்க்காரத்தைத் தேய்த்துக்கொள்ள வேண்டும்.**
- ☞ **தையல் ஊசிகள் துருப்பிடிக்காது இருக்க, ஊசிபோடும் டப்பாவில் சிறிதளவு வாசனைப் பவுடரைக் கொட்டி வையுங்கள்.**
- ☞ **துளசி இலையுடன் வெற்றிலையும் சேர்த்துச் சாப்பிட்டால், உடலில் இரத்தம் விருத்தியாகும்.**
- ☞ **பட்டருடன் சிறிது சீனி தூவி வைத்தால், பட்டரிலிருந்து எந்தவிதத் துர்நாற்றமும் வராது.**
- ☞ **சளி அதிகமானால், கொதிக்கும் நீரில் மஞ்சள் தூள் போட்டு ஆவி பிடித்தால் குணமாகும்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய் செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்*

*- திருக்குறள்.*

## நமது நோக்கு

### வளைகுடாப் புதைகுழி!

ஈராக்கைக் கைப்பற்றியதும் - அதனைப் பெரும் இராணுவ வெற்றியாக அமெரிக்கா பிரகடனப்படுத்திய தும் -

ஈராக் மீதான தாக்குதல் ஓய்ந்ததை பெருமிதம் கொப்பளிக்க அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்ததுடன் - அந்த வேகத்திலேயே, அவர் தனது மத்திய கிழக்கின் மீதான புதிய நகர்வுகளுக்குத் திட்ட மிட்டதும் -

இன்று பக்தாத் தெருக்களில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினருக்கு ஒரு கனவாகவே தெரிகின்றது.

ஈராக்கின் பல பகுதிகளிலும் - சோதனைச் சாவடிக ளிலும், ரோந்துகளிலும், வீதிப் பாதுகாப்பிலும் கடமை யாற்றும் அமெரிக்கப் படையினர் - எந்தக் கைக்குண்டு எங்கிருந்து வீசப்படும் எனவும், எந்தப் பக்கத்திலிருந்து ஆர்.பி.ஜிக்கள் சீறிவருமெனவும் - ஒவ்வொரு கணத்தை யும் அச்சத்திற்குள்ளாகக் கடக்க வேண்டியவர்களாகவே வாழத் தொடங்கியிருக்கின்றனர்.

அவர்களிடம் - அமெரிக்காவின் வெற்றிப் பெருமி தமோ, ஜோர்ஜ் புஷ்ஷின் ராஜதந்திர நகர்வுகள் பற்றிய மகிழ்ச்சியோ காணப்படவில்லை.

மாறாக - அமெரிக்காவில் வாழும் தம் குடும்பத்தார், தமது நிலைபற்றி எத்தகைய கவலைக்காளாகி நிற்கின்ற னரோ என்ற வேதனைதான் அவர்களுக்கு உயிர்ப் பயத்துடன் கலந்துபோய்க்கிடப்பதாகத் தெரியவருகின்றது.

இரு தினங்களுக்கு முன்னர் பக்தாத்தின் தெரு வொன்றில், அமெரிக்க ரோந்துப் படையணியொன்று தாக்கப்பட்டபோது - அப்படையணியிலிருந்த அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் கதறியழுததாகவும், மற்றுமொருவர் தன் னிடமிருந்த இயந்திரத் துப்பாக்கியால் சகட்டுமேனிக்குச் சுட்டதாகவும் - சம்பவத்தை நேரில் கண்டோர் கூறிய தாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவையெல்லாம் - கடந்தசில மாதங்களுக்கு முன்னர் வொஷிங்ரன் நினைத்திருந்த, வெளிப்படுத்தியிருந்த உணர்வலைகளுக்கு முற்றிலும் மாறானவையாகும்.

பக்தாத்திலிருந்து சதாம் ஹுசைன் தப்பிச் சென்ற துடன், அனைத்தும் அமெரிக்கா சார்பாகச் சரியாகிவிடும் என்ற எதிர்பார்ப்புப் பொய்த்துப் போனதுடன்,

அமெரிக்கா - நினைத்த மாதிரியான ஒழுங்கமைப்பை ஈராக்கில் ஏற்படுத்த முடியாமலும் போயிருப்பதைத்தான் மேற்கண்ட நிகழ்வு - உதாரணமாகக் காட்டுகின்றது.

மிக நவீனமான போர்த் தளபாடங்களைக் கொண் டும், வலுவான ஊடுருவிப் பார்க்கும் கண்காணிப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட செய்மதிகள் துணையுடனும் - தனது சிறப்புமிக்க படையணிகளை ஈராக்கில் வைத் திருந்தும் - நாளொன்றுக்கு ஒரு படைவீரனையேனும் இழக்கும் துர்ப்பாக்கிய நிலையை அமெரிக்கா சந்தித்து வருவதானதும், அங்குள்ள அமெரிக்கப் படை வீரர் களிடம் யுத்தத்தின் அழுத்தங்கள் வெளித்தெரிய ஆரம் பித்திருப்பதும் -

உலக மகா வல்லரசுக்கு கிடைத்துவரும் பேரிடிகள் எனக் கூறினால், அது மிகையல்ல என்று சொல்லலாம்.

அமெரிக்காவைப் பொறுத்தவரையில், அது ஈராக்கில் சந்திக்கும் நிகழ்வுகள் - இராணுவ ரீதியில் மட்டுமல்லாது அரசியல் ரீதியாகவும் அமெரிக்க நிர்வாகத்துக்கு அழுத்தங்களைத் தரக்கூடியனவாகும்.

அமெரிக்கச் சிப்பாய்களில் ஒருவர் இறந்தாலும் - அது, அந்நாட்டில் மக்களிடையே குறித்த படை நடவடிக்கைக் கான எதிர்ப்புணர்வைத் தோற்றுவிக்கப் போதுமானது என்ற நிலையில் - ஈராக்கில் நாள்தோறும் சந்திக்கும் இழப்புக்கள் - மிகவிரைவில், பாரிய, பரந்தளவிலான எதிர்ப்பலையை, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு எதிராக உருவாக்கும் என்பதற்கான அறிகுறிகள் தற் போதே தென்படத் தொடங்கியுள்ளன.

ஈராக் மீதான போரை வலிந்து ஆரம்பிப்பதற்கு - அமெரிக்க நிர்வாகமோ, அதனது புலனாய்வுச் சேவையோ - 'பேரழிவுதரும் ஆயுதங்கள்' பற்றிக் கட்டிவிட்ட கதைகள் பற்றிய சந்தேகங்கள் பெருமெடுப் பில் கிளம்ப ஆரம்பித்திருப்பதற்கும் - இந்த நாளாந்த இழப்புகளே முக்கிய காரணமாகின்றன.

ஏற்கனவே - வியட்னாமிய நினைவுகளை தமது மனங்களில் இன்னமும் வைத்திருக்கும் அமெரிக்கர்கள், ஈராக்கிய துன்ப நினைவுகளைச் சுமப்பதற்கு விரும்பு வார்களா என்பது விரைவில் தெரிந்துவிடும்.

இதன்வழியே - ஈராக்கில், அமெரிக்கப் படைகள் சந்தித்துவரும் நெருக்கடிகள் - அதனது தான் தோன்றித்தனமான ஆக்கிரமிப்புப் போக்கிற்கும், சுயலாபச் செயற்பாடுகளுக்கும் தினமும் வலிகளைத் தருவதை யும் -

அது, பெருமெடுப்பிலான நேரடிப் போரின் இழப்பு களைவிட, அதிகளவு பாதிப்பையே விளைவிக்கப் போகின்றது என்பதையும் - அமெரிக்க நிர்வாகம் மறக்க முடியாமல் மனதில் பதியப்போகின்றது என்பது மட்டும் தெளிவானதாகும்.

# குரங்குப்பாஞ்சான் விவகாரத்துக்கு இறுதிமுடிவு; வன்னியிலிருந்து செல்லும் புலிகள் குழு ஆராயும்!

திருகோணமலை - கிண்ணியா, குரங்குப்பாஞ்சான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள, விடுதலைப் புலிகளின் முகாம் தொடர்பான இறுதி முடிவுபற்றி, இவ்வாரத்தில் அறிவிப்பதாக விடுதலைப் புலிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கிண்ணியா செல்லும் விசேட குழு, இதுபற்றி முடிவு எடுக்கும் என்று, விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்த தாக, போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிறகர் டோட்ரயர் தெரிவித்தார். கிண்ணியா செல்லும் விசேட குழு, முகாம் அமைக்கப்படும் இடம் எந்தப் பிரிவைச் சார்ந்தது என்பது பற்றி நிர்ணயிக்கும் எனவும், சு.ப.தமிழ்ச்செல் வன் குறிப்பிட்டதாகத் தெரிவித்த பிறகர் டோட்ரயர் -

எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பே இறுதி முடிவாகும் என்பது கண்காணிப்புக்குழுவின் நிலைப் பாடாகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழகத்திலிருந்து திரும்பும் அகதிகள் நிலை; யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் ஆராய்வு!

தமிழகத்திலிருந்து படகுகள்மூலம் அகதிகள் தாயகம் திரும்புவது தொடர்பாக, யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் நேற்று முன்தினம் நெடுந்தீவுப் பிரதேச செயலரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகள் என்ன நோக்கத் திற்காக நெடுந்தீவுக்கு வருகின்றனர், அவர்களுக்கு எந்த வகையில் உதவிகள் வழங்கப்பட்டு, சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர், இவர்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். எந்த அடிப்படையில் உதவவேண்டும் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகளால் ஆரா யப்பட்டது.

அண்மையில் மன்னார் எனக்கூறி, கச்சதீவில் மக்கள் இறக்கிவிடப்பட்டனர். இதனால், அவர்கள் பெரும் உயிராபத்தை எதிர்நோக்கியது தொடர்பாகவும் யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் கேட்டறிந்துள்ளனர். இவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்ந்து ஏற்படுமானால், தமக்கு அறிவிக்குமாறும், தாங்கள் உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் தெரிவித்தனர்.

கச்சதீவுப் பகுதியில் அநாதரவாக விடப்படும் அகதிகள் தொடர்பான தகவல்கள் தெரிந்தால், தாமதமின்றி - உடனடியா கத் தங்களுக்கு அறிவிக்குமாறும், அவர்களை மீட்க உடனடி நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியதுடன், இது தொடர்பாக நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க நிர்வாகத்துடனும் யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் கலந்துரையாடினர்.

நெடுந்தீவுப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியுடனும், அகதிகள் வருகை மற்றும் இவர்கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்தும், யு.என்.எச்.சி.ஆர். அதிகாரிகள் ஆராய்ந்து சென்றுள்ளனர்.

கடந்தமாதத்திலும், இம்மாதத்திலும் தமிழகத்திலிருந்து இலங்கை அகதிகள்- நெடுந்தீவுக்கு வந்து, யாழ். அரச செயலகம் ஊடாக சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டமை தெரிந்ததே. (113)





யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்த வங்கியில், இரத்தத்திற்கு பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்க, உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்கள் இரத்ததானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்களையே காண்கிறீர்கள்.
(படங்கள் - ராஜ்குமார்)

# மடு செல்லும் யாத்திரிகர்களுக்காக புலிகளின் புதிய சோதனைச் சாவடி!

## அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தகவல்

மன்னார் - மடுவீதியில் விடுதலைப் புலிகள் புதியதொரு சோதனைச் சாவடியை அமைப்பதற்காக - தம்மிடம் மின்சாரம், குடிநீர் வசதிகளைக் கோரியிருப்பதாக, புனர்வாழ்வு புனர மைப்பு அகதிகள் விவகார அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மன்னார் - மடுவீதியில் இராணுவத்தினரின் காவலரணி லிருந்து நான்கு கிலோமீற்றர் உட்புறமாக, ஏற்கனவே இருக் கின்ற விடுதலைப் புலிகளின் சோதனைச் சாவடியை மீளப் புனரமைப்பதற்காக இந்த உதவி கோரப்பட்டிருப்பதாக, அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் இந்த நடவடிக்கை நியாயமானது எனவும், ஏனெனில் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இந்தச் சோதனைச் சாவடியை அமைக்க அவர்கள் விரும்புவதாகவும், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

மடு தேவாலயத்தில் அடுத்தமாதம் நடைபெறவுள்ள உற்சவத்திற்காக, இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான யாத்தி ரிகர்கள் அப்பகுதிக்குச் செல்வர் என எதிர்பார்க்கப்படுவதால், அங்கு குடிநீர், மின்சார வசதிகள் ஏற்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும், தென்பகுதி யாத்திரிகர்களை உள்நுழைய அனுமதிப்பதற்காக, விடுதலைப் புலிகளும் சோதனைச் சாவடி ஒன்றினை ஏற்படுத்துவது தேவையானது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் - தேவை மதிப்பீட்டறிக்கையைத் தயாரித்து, அதனைத் தன்னிடம் கையளிக்கவேண்டும் எனக் கோரியிருப்பதாகவும்-

இராணுவத்தினர் சோதனைச் சாவடியை அமைத்திருக் கின்ற நிலையில், விடுதலைப் புலிகளும் அவ்வாறு ஒன்றை அமைக்க முயற்சிப்பது தவறாகாது எனவும், அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்திருக்கின்றார்.

# நஞ்சுகலந்த தேநீரைப் பருகிய இரு குழந்தைகள் துடிதுடித்துப் பலி!

## குற்றமிழைத்த தந்தை தற்கொலை முயற்சி

நஞ்சுகலந்த தேநீரை அருந்திய இரண்டு பச்சிளம் குழந் தைகள் பரிதாபமாக இறந்த சம்பவம் ஒன்று மாத்தளை அஸ்கிரிய தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தக் குழந்தைகளுக்கு நஞ்சுகலந்த தேநீரைப் பருககியதாகக் கூறப்படும் அக்குழந்தைகளின் தந்தை, தானும் நஞ்சுகலந்த தேநீரை அருந்தி, ஆபத்தான நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மூன்று வயதான திவ்வியராணியும், ஐந்து வயதான மிதிலா வுமே உயிரிழந்த குழந்தைகளாவர்.

குடும்பத்தகராறே இக்கொலைகள் மற்றும் தற்கொலை முயற்சி ஆகியவற்றுக்குக் காரணம் என, ஆரம்ப விசார ணைகளிலிருந்து தெரியவருவதாக மாத்தளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிசிர ஜயசேகர தெரிவித்தார்.

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணி யகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செல வாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | வாங்கும் விலை (ரூ.ச.) | விற்கும் விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.91 | 97.30 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.47 | 155.97 |
| 1 யூரோ | 108.22 | 109.59 |
| 1 சுவிஸ் பிராங் | 69.96 | 71.25 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 62.94 | 64.64 |
| 1 ஜப்பானிய யென் | 0.81 | 0.82 |
| 1 சவூதி றியால் | 25.90 | 25.90 |

# 1983 முதல் 2003 வரை

வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு, இன்றைய சிங்கள அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளை உபயோகித்து வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகளால், தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும்


ஜே. ஆர். ஜெயவர்த்தன

ஆரம்பிப்பதற்காக, புதுப்புது ஆலோசனைகளை அரசு இந்த ஜூலை மாதத்தில் தெரிவித்து வருவதையும், நாம் பார்க்கக்கூடியதாகவுள்ளது. ஆனால், சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால், காலச்சக்கரம் எவ்வாறு சுழன்று வந்து, மீண்டும் அதே புள்ளியில், ஆனால் வித்தியாசமான விதத்தில் நிற்பதைக்காண வியப்பாகவுள்ளது.

2003 ஆம் ஆண்டின், இந்த ஜூலை மாதத்திலே, இலங்கையின் பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கக்கூடாது என்பதற்காக - ரோக்கியோ மாநாடு உறுதியளித்தது. நிதியுதவித் தொகையான 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறுவதற்காக, இன்றைய அரசு பரிதவித்து ஓடித்திரிகின்றது. ஆனால், சரியாக


சந்திரிகா

இருபது ஆண்டுகளுக்கு முன்னால், இதே ஜூலை மாதத்தில், தமிழ்மக்களின் பொருளாதாரமும், உரிமையும் ஒடுக்கப்படவேண்டும் என்பதற்காக - அன்றைய அரசு நடத்திய ஜூலை 83 இனக்கலவரம் என்கின்ற தமிழினப் படுகொலைகளும், தமிழினச் சொத்தழிப்பும் இன்றும் எமது நெஞ்சங்களில் ஆறாதவடுக்களாக அமர்ந்திருக்கின்றன.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, இதே ஜூலை மாதத்தில், தமிழ்மக்களையும், அவர்தம் பொருளாதாரக் கட்டுமானத்தையும் திட்டமிட்டு அழித்தது, ஒரு ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம்தான். இருபது ஆண்டுகளுக்குப் பின்பு 'சிங்களத்தின் பொருளாதாரம் அழிந்துபோயிற்று' என்று அலறித்துடித்து, தமிழ்த்தேசத்துக்கு வெள்ளைக்கொடி பிடித்து வருவதும், ஒரு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம்தான். காலச்சக்கரம் சுழன்று வந்து, மீண்டும் அதேபுள்ளியில் நிற்கின்றது. ஆனால், அன்று அடித்தவன் இன்று அழுது நிற்கின்றான்.

அன்றைய ஜூலை 83 - கறுப்பு ஜூலை 83 - இனக்கலவரம், சில அடிப்படையான விடயங்களைக் காரணமாகக் கொண்டு நடத்தப்பட்ட விடயமாகும். அதில் ஓர் அடிப்படைக் காரணம், தமிழ்மக்களின் பொருளாதாரத்தளத்தைச் சீர்குலைப்பதாகும்.

அன்றைய தினங்களில் அதாவது, 1983 ஆம் ஆண்டு, ஜூலை மாதக் கடைசிவாரத்தில், சிங்கள அரசால் அழிக்கப்பட்ட - தமிழ் மக்களின் சொத்துக்களின் மதிப்பு சுமார் முந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்று கணிக்கப்பட்டாலும், உண்மையான இழப்பு இன்னும் பல மடங்காகும் என்றே கருதப்படுகின்றது. ஒரு தர்க்கத்திற்காக, முந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் என்ற கணிப்பீட்டை ஏற்றுக்கொண்டாலும்கூட, இருபது ஆண்டுகளுக்கு முன்பு, அது ஒரு மிகப் பாரிய இழப்பீடு என்பதில் ஐயமில்லை.

அதைத் தவிர, பின்னாட்களில், அதாவது 1983 ஆம் ஆண்டிலிருந்து, இன்றைய சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்வரை, மாறி மாறி வந்த சிங்கள அரசுகள், தமிழ்த் தேசத்தின்மீது தொடுத்த பாரிய இராணுவ நடவடிக்கைகளும், பொருளாதாரத் தடைகளும் ஏற்படுத்திய பொருளாதாரச் சீர்குலைவும், சொத்து நாசமும் கொஞ்சநஞ்சமல்ல.

இன்றும்கூட, நூறாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் தத்தம் சொந்த வீடுகளுக்குப் போகமுடியாதவாறு, சிங்கள இராணுவம் ஆக்கிரமித்துள்ளமையும், ஒருவகையில், தமிழ்மக்கள் மீதான பொருளாதாரத் தாக்குதல்தான்.

ஜூலை 83 இனக்கலவரம், தமிழ்மக்கள் மீது பிரயோகிக்கப்பட்டதில் சில அடிப்படையான நோக்கங்கள் இருந்தன. அதில் ஒன்று நாம் இப்போது குறிப்பிட்டவாறு, தமிழரின் பொருளாதார வளத்தை அழிப்பதாகும். மற்றையது, அவர்களது மனவலிமையை அழித்து, அவர்களுக்கு வன்முறையூடாக ஒரு பாடத்தைப் புகட்டுகின்ற முயற்சியாகும்.

அதாவது, உளவியல் ரீதியாக- 'தமிழர்கள் தாங்கள் ஒரு நிர்க்கதியான இனம்'- 'தங்களைக் காப்பாற்றுவதற்கு எவருமில்லை'- 'தாங்கள் எந்நேரமும் தாக்கப்பட்டு அழிக்கப்படலாம்' - 'தாங்கள் எப்போதும் சிங்கள பௌத்த ஆட்சியின் கருணையின்கீழ் - தயவின் கீழ், வாழவேண்டிய இரண்டாந்தரக் குடிமக்கள்' என்ற எண்ணத்தை, தமிழ்மக்களின் நெஞ்சுக்குள் ஆழப்புதைக்கும் நோக்கோடும், இந்த ஜூலை 83 இனக்கலவரத்தை, அன்றைய ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் சிங்கள அரசு நடத்திக்காண்பித்தது.



இந்த ஒருங்கிணைந்த இலங்கைத்தீவில், சிங்களவர்கள் மட்டுமே அதிகாரங்களை வைத்துள்ளார்கள்.

இந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள சிங்களவர்களுக்கு - தமிழர்கள் இந்த ஒருங்கிணைந்த இலங்கையில் வாழமுடியாத அளவில் நடத்தப்பட்டிருக்கின்றார்கள் என்ற அறிவாவது உள்ளதா' என்று, நியூயோர்க் 'வொஷிங்ரன் போஸ்ட்' பத்திரிகை எழுதியிருந்தது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாத தமிழினப் படுகொலைகளில், உலகநாடுகளே முதல் தரம் விழித்து எழுந்திருக்கையில், ஒரேயொரு நாடு மட்டும் விழித்தெழவில்லை. அது வேறு எந்த நாடும் அல்ல. சிங்கள பௌத்த இலங்கையே தான். அதன் அன்றைய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்றைய தினங்களில் நடந்துகொண்ட விதமும், பேசிய பேச்சுக்களும் ஒரு சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனைகளை அப்படியே பிரதிபலித்தன.

தமிழினப் படுகொலைகளும், தமிழரின் சொத்துக்களும் நாசமாக்கப்பட்ட, நாசமாக்கப்படுகின்ற வேளையில், அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசு நடந்துகொண்ட விதங்கள் ஏற்கெனவே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

# இலங்கையில் சுழன்ற காலச்சக்கரம்!

இப்போது நாம் கூறுகின்ற இந்தக் கருத்தை ஆமோதிக்கும் வகையில் - அன்றைய அமைச்சரான காமினி திஸநாயக்க உரையாற்றினார். 1983 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதியன்று, ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரான காமினி திஸநாயக்க, பின்வருமாறு கொக்கரித்தார் - ஆமாம். கூறவில்லை- கொக்கரித்தார் என்பதே சரியான பதம்.

'உங்களைத் தாக்கியது யார்? - சிங்களவர்கள்.

உங்களைக் காப்பாற்றியது யார்? - சிங்களவர்கள்.

நாங்கள்தான் உங்களைத் தாக்கவும், காப்பாற்றவும் முடியும். உங்களைக் காப்பாற்ற இந்திய இராணுவம் வருமாயிருந்தால், அதற்கு 14 மணித்தியாலங்கள் தேவை. ஆனால், 14 நிமிடங்களுக்குள் இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும், இந்த நாட்டிற்காக நாம் அர்ப்பணிப்போம்.

உங்களுடைய நெற்றிகளில் நீங்கள் ஒரு யாழ்ப்பாணத் தமிழன் என்றோ, மட்டக்களப்புத் தமிழன் என்றோ, மலையகத் தமிழன் என்றோ, இந்துத் தமிழன் என்றோ, கிறிஸ்தவத் தமிழன் என்றோ எழுதப்படவில்லை. எல்லோருமே தமிழர்கள்' - இவ்வாறு காமினி திஸநாயக்க 1983 இல் கொக்கரித்தார்.

ஆனால், காலதேவன் சிரித்தான், அவனோ விந்தையானவன். காலச்சக்கரம் சிறிது சுழன்றது - தமிழீழ மக்களைக் காப்பதற்கும், அவர்தம் உரிமைக்காகப் போராடுவதற்குமென்று ஏற்கனவே உருவாகியிருந்த இயக்கம் வளர்ந்து- விஸ்வரூபம் எடுத்தது. ஆனால், 'எவர்' தமிழ


காமினி திஸநாயக்க

ரைக் காப்பற்றுவதற்காக வருவார்கள் என்று காமினி திஸநாயக்க நினைத்தாரோ, அவர்கள் - அந்த இந்தியப் படையினர்- தமிழர்களைக் கொல்வதற்காகவே வந்தார்கள் - கொன்று - கொல்லப்பட்டுத் திரும்பினார்கள்.

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று, 'நியூயோர்க் - வொஷிங்ரன் போஸ்ட் - பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் கீழ்வரும் பொருட்பட எழுதியது.

'சேர்ந்து வாழ்வது இவ்வளவு கஷ்டம் என்றால், ஏன் பிரிந்து வாழமுடியாது? வடக்கு மக்களுக்குத் தனி ஆட்சி கொடுத்தால் என்ன? ஐக்கிய நாடுகள் சபையிலுள்ள பல நாடுகள் போல், தமிழ்மக்களும், தாங்கள் ஒரு தனித்துவமான தேசம் என்பதற்குரிய சரியான சான்றுகளை வைத்துள்ளார்கள்.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24 ஆம் திகதி இரவிலிருந்து, தொடர்ந்து இலங்கைத் தீவே எரிந்துகொண்டிருந்தபோதும், அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன மௌனமாகவேயிருந்தார். ஐந்து கோரமான நாட்களுக்குப் பின்னர்தான் - அதாவது ஜூலை 28 ஆம் திகதியான வியாழக்கிழமை இரவுதான், ஜனாதிபதி ஜெயவர்த்தன முதன்முதலாக இனக்கலவரம் குறித்து நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சியில் உரையாற்றினார்.

அப்போதுகூட, தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்டுவருகின்ற இந்த இனப்படுகொலைகள் குறித்து, அவர் வருத்தம் தெரிவித்தோ, கவலை தெரிவித்தோ - அனுதாபம் தெரிவித்தோ - ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. மாறாக, இந்தக் கோரமான இனப்படுகொலைகளை நியாயப்படுத்தும் விதத்திலேயே, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் உரை அமைந்திருந்தது.

1956 ஆம் ஆண்டிலிருந்து, தமிழ்மக்கள் மீது சிங்களமக்கள் கொண்ட நம்பிக்கையின்மை வளர்ந்து வந்ததன் வெளிப்பாடே, இந்த இனக்கலவரங்கள் என்றும், இவ்வாறான மனக்குறைகள் சிங்களமக்களுக்கு இருக்கும் பட்சத்தில், அவர்கள் வன்முறையில் ஈடுபடுவது எளிதான செயலாகும்' என்றும், '77 வயது நிரம்பிய ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன அன்று தெரிவித்தார்.

அத்தோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் மேலும் இவ்வாறு கூறினார்.

'சிங்களமக்களை அமைதிப்படுத்துவதற்காகவும், அவர்களுடைய இயல்பான வேட்கையைப் பூர்த்திசெய்வதற்காகவும், ஒரு புதிய சட்டத்தை நான் அமுலாக்க இருக்கின் றேன். இந்தப் புதிய சட்டத்தின் பிரகாரம், நாட்டுப் பிரிவினைகோரும் எவரும், இந்த நாடாளுமன்றத்தில் அங்கத்தவர்களாக முடியாது. அதுமட்டுமல்ல, நாட்டுப் பிரிவினைகோரும் எந்த அரசியற்கட்சியும் தடைசெய்யப்படும். இனிமேல் நாட்டைப் பிரிப்பது குறித்து, எவரும் சட்டரீதியாகச் செயற்படமுடியாது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு, சிங்கள பௌத்த பேரினவாதிகளின் வன்முறைச் செயல்களால் தமிழினம் எரிந்து கொண்டிருந்த நிலையில், சிங்கள ஜனாதிபதி கூறிய வார்த்தைகள்தான் இவை.

இது குறித்து Tamil Nation இணையத்தளம் பின்வருமாறு குறிப்பிட்டது-

'ஜனாதிபதி - தமிழர்களின் நிலைகுறித்துக் கவலை தெரிவிக்கவில்லை. ஏனென்றால், தமிழர்கள் குறித்து அவர் கவலைப்படவில்லை. ஜனாதிபதி - தமிழர்களுக்கு நேர்ந்ததையிட்டு அனுதாபம் தெரிவிக்கவில்லை. ஏனென்றால், ஜனாதிபதி- தமிழர்கள்மீது அனுதாபம் கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி - தமிழர்களுக்கு நேர்ந்தகதி குறித்துப் பேரதிர்ச்சி தெரிவிக்கவில்லை. ஏனென்றால், அன்று தமிழர்களுக்கு ஏற் பட்டகதி, ஜனாதிபதிக்கு பேரதிர்ச்சி தரக்கூடியதாக இருக்கவில்லை.'

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன, தமிழ் மக்களுக்கு ஏற்பட்டநிலை குறித்து அதிர்ச்சியோ, அனுதாபமோ, வருத்தமோ தெரிவிக்கவில்லை என்பதைக் குறிப்பிட்டு, International Commission of Jurists, டிசம்பர் 83 இல் ஓர் அறிக்கையில் தெரிவித்திருந்தது.

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி வெளிவந்த "Economist" சஞ்சிகையும் இதே கருத்தைப் பிரதிபலித்தது. உலகளாவியரீதியில், அரசுக்கு எதிராகக் கண்டனங்கள் எழுந்தன. இலங்கையில் சிங்கள பௌத்த மேலாண்மையை மட்டும் உறுதி செய்யும் அரசியல் யாப்புக் குறித்து, கடுமையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

ஆனால், இன்றுவரை இலங்கையின் ஜனநாயகத்தை, ஒரு பின்பற்றத்தக்க உதாரணமாக - அமெரிக்கா, ஜேர்மனி, ஜப்பான், பிரிட்டன் போன்ற நாடுகள் மெச்சியும், போற்றியும் வருவதை நாம் இங்கே கவலையுடன் சுட்டிக்காட்ட விழைகின்றோம்.

ஆனால், தமிழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கு எதிராகவும், அரசியல் உரிமைகளுக்கு எதிராகவும் இயற்றப்பட்ட இலங்கையின் அரசியல் யாப்பு, இன்று தன்னுடைய சொந்தப் பொருளாதார வளர்ச்சிக்கு எதிராக விருப்பதை, இலங்கையும் உணர்ந்துள்ளது.

இன்று உலகநாடுகள் தருவதாக வாக்களித்த 4.5 பில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெறவேண்டுமென்றால், சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டும். சமாதானப் பேச்சுக்கள் தொடரவேண்டுமென்றால் - முறையான, உருப்படியான செயற்திறனுள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை, அரசு - தமிழ் மக்களுக்கு வழங்கவேண்டும். அதற்கு இலங்கையின் அரசியல் யாப்புத் தடையாக


ரணில் விக்கிரமசிங்க

வுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் - இந்தக்கால கட்டத்தில் கோரிநிற்பது, ஓர் 'இடைக்கால நிர்வாகமே.' அதாவது, ஓர் இடைக்காலத்திற்குரிய நிர்வாகமேதவிர, முழுமையான தீர்வுக்குரிய நிர்வாகம் அல்ல. தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்குரிய பதில், இடைக்கால நிர்வாகம் அல்ல.

## சபேசன்

தமிழீழ மக்களின் - அவசியமான அன்றாடப் பிரச்சினைகளை இடைக்கால கட்டத்தில் தீர்க்கக்கூடிய செயற்திட்டம்தான் இடைக்கால நிர்வாகமாகும். இதைச் செய்து முடிப்பதற்கே, அரசுக்கு விழி பிதுங்குகின்றது என்றால், தமிழரின் தேசியப் பிரச்சினையை எவ்வாறுதான் தீர்க்கப் போகின்றார்களோ என்ற கவலையும் எழுகின்றது. அதற்குக் காலம் உரிய பதில் சொல்லவேண்டுமென்றால், இலங்கையின் சிங்கள பௌத்தப் பேரினவாத அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும்.

1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை- தமிழினப் படுகொலைகளுக்கும், அழிவுக்கும் இதுவரை நீதி கிடைக்கவில்லை.

தொடர்ந்து தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிவுகளுக்கும், இதுவரை நீதி கிடைக்கவில்லை. இன்று தமிழினம் வலுப்பெற்று, தக்கதொரு தலைமையின்கீழ் ஒன்றுதிரண்டு, பலத்தின் அடிப்படையில், சமாதானத் தீர்வு ஒன்றினை நாடி நிற்கின்றது. நீதி கிடைக்கவேண்டும். அது நேரத்துக்கும் கிடைக்கவேண்டும்.

☆

# அமெரிக்கப்படை மீதான தாக்குதல் சதாம் ஹூசைன் உரையில் பாராட்டு


பாக்தாத்தில் அமெரிக்கப் படைகள்

(பக்தாத்)

ஈராக்கிய முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூசைனின் உரை எனக் கருதப்படும், மற்றுமோர் ஒலிப்பதிவு நாடா நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ளது. இதில் - ஈராக்கை ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் மீது நடத்தப்படும் அதிரடித் தாக்குதல்களுக்கு- பாராட்டுக்களும், வாழ்த்துரைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் - வெளியாருக்கு ஒத்தாசையாக இருக்கும் ஈராக்கியர்களையும், அந்த உரையில் சதாம் கண்டித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கில் - பாத் கட்சி ஆட்சியை கைப்பற்றியதன் 35 ஆம் ஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் இந்த உரை, துபாயிலுள்ள அல் அராபியா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

ஆண்டு நிறைவு தினத்தையொட்டி, புதிதாகத் தாக்குதல்கள் நடக்கும் என்ற அச்சத்தில், ஈராக்கிலுள்ள அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டன.

ஈராக்கில், பேரழிவு ஆயுதங்கள் உள்ளதாக கூறப்படுவது முற்றிலும் ஆதாரமற்றது. அமெரிக்கப் படைகளுக்கும் அதிகாரிகளுக்கும் கீழ் பணியாற்றும் ஈராக்கியர்கள், அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களின் அடிமைகள் என, சதாமின் உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவியுடன் மாயமான அதிரடிப்படை வீரர் கைது

## ஜேர்மனியில் தடுத்துவைப்பு


தாயும் மகளும் - மகிழ்ச்சி

பன்னிரெண்டு வயதான, பிரிட்டிஷ் மாணவியை கடத்திச் சென்றதான குற்றச்சாட்டின் பேரில் - அமெரிக்க அதிரடிப்படை வீரர் பேகர், ஜேர்மனியில் வைத்து ஜேர்மனியப் பொலிஸாரினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார்.

பிராங்பேர்ட் விமான நிலையத்திலிருந்து, 12 வயதான ஷிவோன் என்ற அந்த மாணவி, தனது தாயகத்துக்கு விமானம் மூலம் புறப்பட்டுச் சென்றுவிட்ட நிலையில், விமான நிலையத்தில் வைத்தே, பேகர் - பிரிட்டிஷ் மற்றும் ஜேர்மனியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். தற்போது, பிராங்பேர்ட் சிறையில் ஆட்கடத்தல் குற்றத்திற்காக அடைத்துவைக்கப்பட்டிருக்கும் பேகர், மேலதிக விசாரணைக்காக பிரிட்டனுக்கு அனுப்பப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாணவி, தற்போது தனது பெற்றோருடன் மீள இணைந்துள்ளார். தனது மகள் மீளக் கிடைத்தது, மகிழ்ச்சி தருவதாக அவரின் தாயார் அழுதபடி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

12 வயதான பிரிட்டிஷ் மாணவி - 31 வயதான அமெரிக்க அதிரடிப்படை வீரருடன் கொண்ட இன்ரநெட் ஊடான தொடர்பையடுத்து - கடந்த வாரம் இருவரும் நேருக்குநேர் சந்தித்துக் கொண்டனர். இதன் பின்னர், இவர்கள் பிரிட்டனை விட்டு வெளியேறி தலைமறைவான நிலையில், பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பிய புலனாய்வாளர்கள், இவர்களைத் தேடி வலைவிரித்தமை தெரிந்தே.

# சந்தைக்குள் கார் புகுந்தது: 9 பேர் பலி: 15 பேர் காயம்!

அமெரிக்க - லொஸ் ஏஞ்சலஸ் பகுதியிலுள்ள பிரபல சந்தை ஒன்றினுள், கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று புகுந்ததில், மூன்று வயதுச் சிறுமி உட்பட ஒன்பது பேர் பலியாகினர். 44 பேர் காயமடைந்தனர். இவர்களில் 15 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

புதன்கிழமைகளில் மட்டும் கூடும் - சாந்த மொனிக்கா விவசாய சந்தையில், இந்த அசம்பாவிதம் நடைபெற்றது. மணிக்கு 112 கிலோ மீற்றர் வேகத்தில் வந்த காரினால் மோதுண்ட பலர், மேலே தூக்கியெறியப்பட்டதை தாம் கண்டதாக, விபத்தில் உயிர் தப்பியவர்கள் தெரிவித்தனர். காரை ஓட்டிவந்தவர்,



86 வயதானவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பரிசோதனைகளில், சாரதி அந்நேரத்தில் மதுபோதையில் இருககவில்லை என அறியப்பட்டுள்ளது. பிறேக் என எண்ணி, அக்சலேட்டரை சாரதி தவறாகக் கையாண்டதே, இவ்விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

## அல் - கெய்டா உறுப்பினரை ஏற்க குவைத் மறுப்பு!

அல்-கெய்டாவின் பேச்சாளர் சுலைமான் அபு கேயித் என்பவரை, மீளத் தனது நாட்டிற்குள் வர, குவைத் அரசு அனுமதி மறுத்துள்ளது.

அபு கேயித் - ஈரானிய அதிகாரிகளால் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவரை, அவரின் சொந்த நாடான குவைத்திற்கு நாடு கடத்த ஈரான் முயற்சித்தபோது, அவரைத் தம் நாட்டுக்குள் ஏற்கப் போவதில்லை என், குவைத் அரசு அறிவித்துள்ளது. இது தொடர்பாக, நேற்றுக் கருத்துத் தெரிவித்த குவைத உள்துறையமைச்சர், செப்ரம்பர் 11 ஆம் திகதி தாக்குதலின் பின்னர், கேயித் மீதான குவைத் பிராஜாவுரிமை நீக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

# காபூலின் பாதுகாப்பு கனேடியப் படையிடம்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில்- சர்வதேச பாதுகாப்பு உதவிப்படைப் பிரிவுத் திட்டத்தின் கீழ், அந்த நகரின் பாதுகாப்புப் பொறுப்பை கனேடியப் படையினர் நேற்று ஏற்றுக்கொண்டனர். இதுவரை இப்பணியில் ஜேர்மனியப் படையினரே ஈடுபட்டிருந்தனர்.

காபூலிலுள்ள பல்தேசிய படைமுகாமில், நேற்று - கனேடிய தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. இப்படைப் பிரிவு, காபூலில் வழமைநிலைமையைப் பேணுவதில், உள்ளூர் பொலிஸாருக்கு உதவியளிக்கும். ஆப்கானிஸ்தானில் சுமார் 1,950 கனேடியப் படையினர் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர்களை தாக்கும் இதய நோய்கள்

**ஏழைச் சிறுவர் உயிர்காக்கும் 'அரும்புகள் சிறுவர் நிதியம்' - யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் அங்குரார்ப்பண வைபவம் வரும் செவ்வாயன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**க.செந்தூரன்**
இறுதிவருட மருத்துவ மாணவன்

பிறக்கும் பொழுதே இருதய நோய்களுடன் பிறக்கும் எமது எதிர்காலச் சமுதாயமாகிய சிறுவர்களின் எண்ணிக்கை - இந்திய, இலங்கை வம்சத்தினரில் அதிகளவில் காணப்படுவதாக, ஒரு புள்ளி விபரம் தெரிவிக்கின்றது. தனது பிள்ளை வளர்ந்து, கல்வி கற்றுப் பெரியவனாவான் என்ற தாயின் ஏக்கத்தை வீணடிக்கும் வகையில், சடுதியான மரணங்களும் இந்த இருதய நோய்களினால் ஏற்படுகிறது.

ஒவ்வொரு ஆயிரம் குழந்தைகளில் எட்டுக் குழந்தைகள் (8:1000) பிறப்பிலேயே இதயக் குறைபாட்டுடன் பிறக்கின்றன. யாழ்ப்பாணத்தில் மட்டும் ஏறத்தாழ 8000 குழந்தைகள் இந்தக் குறைபாட்டுடன் ஒரு வருடத்தில் பிறக்கின்றன. இதனால், ஏறத்தாழ 60 குழந்தைகள் இதய நோயாளிகளாக வருடாந்தம் எமது சமுதாயத்தின் சுமையாக ஒப்படைக்கப்படுகின்றார்கள். இவர்களில் 2/3 பகுதியினர், சத்திரசிகிச்சை மூலம் குணப்படுத்தப்படுத்தக் கூடியவர்களாவார்கள். இதனால், ஆரம்பத்திலேயே கண்டறியப்படும் பிறப்புக் குறைபாட்டு இதய நோய்கள் முற்றாகக் குணப்படுத்தக் கூடியவையாக உள்ளன.

### ஏன் ஏற்படுகின்றன?

எமது கலாசாரத்தில் - சொந்தத்தில் திருமணம் செய்தல், இந்நோய்க்கான ஒரு முக்கிய காரணியாகக் காணப்படுகிறது. இங்கு தாய், தந்தை இருவரினதும் பரம்பரை அலகுகளில் உள்ள சிறு குறைபாடுகள், குழந்தைகளில் முழுமையாக வெளிக்காட்டப்படுகின்றன.

தாயின் பிரசவ காலத்தின் முதல் மூன்று மாத காலத்தில் ஏற்படும், ஜேர்மன் சின்னமுத்து மற்றும் HSV போன்ற குழந்தையைப் பாதிக்கும் வைரஸ்கள் நிரூபிக்கப்பட்ட காரணியாகக் காணப்படுகின்றன. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களிடையேயும் இதய நோய்கள் காணப்படலாம். இவை தவிர - சூழல் காரணிகளான, உயரமான பிரதேசத்தில் வசித்தல் போன்றவையும் இதய நோய்களில் குறிப்பிடத்தக்களவு பங்கை வகிக்கின்றன. வேறு பிறப்புக் குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகள் பொதுவாக இதயக் குறைபாட்டையும் கொண்டிருக்கின்றன என்பதும் ஓர் உண்மையாகும்.

### பொதுவான இதய நோய்கள்:

பிறப்பில் ஏற்படும் இதய நோய்கள் - நீல நிறப் பாதிப்பற்றவை (Acyanotic), நீல நிறப் பாதிப்புள்ளவை (Cyanotic) என இருவகைப் படுத்தலாம். பலோட் இன் நால்வகைக் குறைபாடு, பெருநாடிகள் மாறியமைதல் போன்றவை நீலநிறப் பாதிப்புள்ள இதய நோய்களாகும். இவை இலகுவில் குழந்தைக்கு மரணத்தை ஏற்படுத்தக்கூடியவையாகும். இவைதவிர - அனேகமான இதய நோய்கள், நீல நிறப் பாதிப்புற்றுள்ளதுடன் இலகுவில் குணப்படுத்தக் கூடியதாகவும் உள்ளன.

### இதயக் கீழறைச்சுவர்க் குறைபாடு (ventricular Septal Defect - VSD)

இது பொதுவாக, இளம் பராயத்தினரைப் பாதிக்கின்ற ஒரு வகை இதய நோயாகும். இக் குறைபாட்டினால் வலது, இடது இதய அறைகளிடையே சுத்த இரத்தம் அசுத்த இரத்தத்துடன் கலப்படைகின்றது. குறைபாடு மிகச் சிறியதாக இருப்பின், குழந்தை எதுவித நோய் அறிகுறிகளையும் காட்டுவதில்லை. பதிலாக, நோயானது தற்செயலாகவே கண்டுபிடிக்கப்படுகின்றது. குறைபாடு பெரியதாயின், அடிக்கடி ஏற்படும் சுவாசத் தொற்று, இதயம் செயலிழத்தல், வளர்ச்சிக் குறைபாடு, இலகுவில் களைப்படைதல் போன்ற அறிகுறிகள் காணப்படலாம்.

இக்குறைபாட்டை ஈ.சீ.ஜீ. நாடாப் படம், எக்ஸ் - கதிர்ப் படம் மற்றும் நவீன நுண்ணலைப் படப்பிடிப்புகள் மூலம் கண்டுபிடிக்கலாம்.

இந்நோயைக் குணப்படுத்துவதற்காக, இதனுடன் தொடர்புள்ள சுவாசத் தொற்று, இருதயத் தொற்று என்பவற்றை முதலில் குணப்படுத்துவது அவசியமாகும். பெரும்பாலான இருதயக் கீழறைச் சுவர்க் குறைபாடுகள், சுயமாகவே அற்றுப் போகும் தன்மை உள்ளவை. இரண்டு வயதின் பிற்பாடு, நோய் அறிகுறிகளைக் காண்பிக்கும் குழந்தைகளுக்கு திறந்த இதய அறுவைச் சிகிச்சை செய்யப்படலாம். எவ்வளவு குறைந்த வயதில் சத்திர சிகிச்சை செய்யப்படுகின்றதோ, அவ்வளவு கூடிய வெற்றி கிடைக்கப் பெறும். சத்திர சிகிச்சையின் பின்னர், முற்றிலும் சாதாரணமான வாழ்க்கை கிடைக்கப் பெறுவது ஒரு சிறப்பம்சமாகும்.

### இதய மேலறைச்சுவர்க் குறைபாடு (Atrial Septal Defect - ASD)

சாதாரணமாகக் குழந்தை கருப்பையில் உள்ளபோது, இதய மேலறைச் சுவரிலுள்ள துவாரமானது பிறப்பின் பின்னர் தானாகவே மூடப்பட்டுவிடும். ஆனால், சில காரணங்களினால் இது நிலைத்து நிற்கும் போது இந்த இதய நோய் ஏற்படுகின்றது.

சிலவேளைகளில் - இந்த இதய நோயானது, வேறு உடற் கட்டமைப்புக் குறைபாடுகளுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படலாம். இங்கு சுத்த இரத்தமானது அசுத்த இரத்தத்துடன் கலப்படைகின்றது. பெரும்பாலான குழந்தைகளின் சிறுபராயத்தில் எதுவித நோய் அறிகுறிகளும் தென்படாத போதிலும், வயது வந்த சிறுவர்களில் - அடிக்கடி சுவாசப்பைத் தொற்று; மூச்சுத் திணறல், வளர்ச்சிக் குறைபாடு போன்றன ஏற்படுகின்றன.

இந்நோயை ஈ.சீ.ஜி. நாடாப்படம், எக்ஸ் - கதிர்ப்படம் போன்றவற்றில் வலது இதய அறை பெரிதாக இருப்பதைக் கொண்டு அறியலாம்.

சிகிச்சையாக, தொற்றுநோய் மற்றும் இருதயத் துடிப்பு ஒழுங்கின்மை என்பவற்றைக் குணப்படுத்தல் அவசியமாகும். திறந்த இதய அறுவைச் சிகிச்சை, மிக இள வயதில் செய்யப்படுமாயின் அதிசயிக்கத்தக்க வெற்றி கிடைக்கப் பெறுகின்றது. தற்காலத்தில், இதயத்தைத் திறக்காமலேயே அறுவைச் சிகிச்சை செய்யும் முறை



அறிமுகப்படுத்தப்பட்டது, விஞ்ஞானத்தின் விந்தைகளில் ஒன்றாகும்.

### பலோட் இன் நால்வகைக் குறைபாடு (Fallot's Tetralogy)

இது, நீல நிறக் குறைபாடுள்ள ஒரு நோயாகும். இங்கு - வலது பெருநாடிச் சுருக்கம், இதயக் கீழறைச் சுவரில் குறைபாடு, வலது இதயக் கீழறைப் பெருக்கம், இடது பெருநாடி மாறியமைதல் போன்ற நான்குவகைக் குறைபாடுகள் சேர்ந்தே காணப்படும்.

குழந்தைகளில் குணங்குறிகள் பொதுவாக மூன்று மாதங்களின் பின்னரே தெரிகின்றன. குழந்தையின் உதடுகள், நகங்கள் யாவும் நீலநிறமாகி 'நீலக் குழந்தை' என அழைக்கப்படுகிறது.

குழந்தை வளரும்போது குந்திய நிலையில் இருப்பதனால், குணங்குறிகள் குறைவதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இங்கு மூளை மற்றும் இதயம் பாதிப்புற்று, சடுதியான மரணம்கூட ஏற்பட வாய்ப்புள்ளது.

இந்த நோயினை ஈ.சீ.ஜி. நாடாப் படம், எக்ஸ் - கதிர்ப் படம், இருபரிமாண நுண்ணலைப் படங்கள் மூலம் இலகுவாக அடையாளம் காணலாம்.

சிகிச்சையாக - மருந்து, மாத்திரைகள் மூலம் ஓரளவு குணப்படுத்த முடியும். பல சந்தர்ப்பங்களில் சத்திர சிகிச்சை செய்வதன் மூலமும் குணப்படுத்தலாம். அவ்வாறு சத்திர சிகிச்சைக்கு உட்பட்டவர், பூரணமான சாதாரண வாழ்க்கையொன்றை வாழமுடியும். சத்திரசிகிச்சை செய்யாவிடின் 20 வயதை அடையும் முன்னர் மரணம் நிச்சயமாகின்றது.

### பெருநாடிகள் மாறியிருத்தல் (Transposition of Great Vessels - TGV)

இது, முக்கியமான நீல நிறக் குறைபாடுள்ள இதய நோயாகவும், பெரும்பாலான ஒருவயதிற்குட்பட்ட இதய நோயிலான இறப்பிற்கும் காரணியாக உள்ளது. இது பெண் குழந்தைகளிலும் பார்க்க, நான்கு மடங்களவில் ஆண் குழந்தைகளில் காணப்படுகின்றது. இவர்கள் காலப்போக்கில் நிறை குறைவான குழந்தைகளாக மாற்றமடைகின்றனர்.

நோய் அறிகுறியாக - கடுமையான நீலநிறப் பாதிப்பு, பிறந்தவுடனேயே காணப்படும். பின்னர்- மூச்சுத் திணறல், இதயச் செயலிழப்பு, வளர்ச்சிக் குறைபாடு என்பன ஏற்படுகின்றன.

எக்ஸ் - கதிர்ப்படம், ஈ.சீ.ஜி. நாடாப்படம், இரு பரிமாண நுண்ணலைப்படம் என்பன இந்நோயை அடையாளம் காண்பதில் பெரிதும் உதவிபுரிகின்றன. இந்நோயைக் குணப்படுத்துவதற்காக தேவையேற்படின் மருந்துகள் சிலவற்றை எடுக்கலாம். சத்திரசிகிச்சை மிகச் சிறந்த பலனை அளிக்கவல்லது. இதனை முழுமையாகக் குணப்படுத்தல் கடினமானதொன்றாகும்.

இந்நோய்கள் தவிர, குழந்தைகளில் பிறப்பில் நிலைத்த இணைப்புச் சிறுகுழாய் (Patent Ductus Arteriosus - PDA), இடது பெருநாடிச் சுருக்கம் (Aorfic Stenosis) போன்றவையும் காணப்படலாம். ★

நமது ஈழநாடு

The Leading Daily of Tamils' Homeland

# வெஸ்பேர்கை தூதராக ஏற்க இந்திய அரசாங்கம் மறுப்பு!

(புதுடெல்கி)

இலங்கைக்கான முன்னாள் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்- இந்தியாவுக்கான நோர்வேத் தூதுவராக நியமிக்கப்படுவதை, இந்தியா நிராகரித்துள்ளது.

வெஸ்பேர்க், தாம் தூதுவராக நியமிக்கப்படும் நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவது, கடந்தகால அனுபவமாகும். இதனால், இவரை இந்தியாவுக்கான தூதுவராக ஏற்கமுடியாது என, இந்திய வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

வெஸ்பேர்க் நியமனத்தை இந்தியா நிராகரித்துள்ள தகவல், உத்தியோகப்பற்றற்ற வகையில் வாய்வழியாகவே நோர்வேக்குத் தெரியப்படுத்தப்பட்டதால், இரு நாடுகளிடையேயான விரிசல்கள் எழ வாய்ப்பில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், வெஸ்பேர்க் இந்தியத் தூதராக நியமிக்கப்படவுள்ளதாக, பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறானவை எனவும், இது குறித்து இந்தியாவுடன் தொடர்பு ஏதும் மேற்கொள்ளவில்லை எனவும், நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

## யாழ். மண்ணின் நாதஸ்வர மேதை

# பத்மநாதன் உடல் தீயுடன் சங்கமம்

நாதஸ்வரச் சக்கரவர்த்தி இசை மேதை - அளவெட்டி என்.கே.பத்மநாதனின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள், நேற்றுக்காலை கில்னர் ஒழுங்கையிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பெருந்திரளானோர் கலந்துகொண்டு, தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். இதனையடுத்து அன்னாரது பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தீயுடன் சங்கமமானது.

இறுதி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, பல்கலைக்கழகத் துணைவேந்தர் மோகனதாஸ் உட்படப் பலரும் உரையாற்றினர்.

# பருத்தித்துறை துறைமுகத்தை பொறுப்பேற்க அதிகாரிகள் குழு

## கொழும்பிலிருந்து இன்று வருகை

பருத்தித்துறை துறைமுகத்தைப் பொறுப்பேற்பதற்காக, துறைமுக அதிகார சபையின் உயர் அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று, இன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளது.

இன்று காலை யாழ். வரும் இந்த அதிகாரிகள், செயலகத்தில் - யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்துவர் எனவும் தெரியவருகிறது.

பின்னர், இவர்கள் பருத்தித்துறை துறைமுகத்தை - யாழ். மாவட்ட அரசாங்க அதிபரிடமிருந்து பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

## பொதுமக்கள் எதிர்த்ததால்

# போராளிகளை கைது செய்யும் படையினரின் முயற்சி தோல்வி!

வவுனியா, தாண்டிக்குளத்தில் இருந்து கிடாச்சூரிக்கு - அரசியல் வேலைகளுக்காகச் சென்ற நான்கு போராளிகளை, நேற்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்ய முற்பட்டபோது, பொதுமக்கள் ஒன்று திரண்டு தடுத்துநிறுத்தினர்.

இரு பெண் போராளிகள் உட்பட நான்கு போராளிகள் சென்று கொண்டிருந்தபோது - அவர்களிடம் தொலைத்தொடர்புக் கருவி இருப்பதாகக் கூறி, இராணுவத்தினர் அவர்களைக் கைதுசெய்ய முயன்றனர்.

பொதுமக்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து, படையினர் தமது முயற்சிகளைக் கைவிட்டனர். இது தொடர்பாக - வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டதையடுத்து அவர்களும் அப்பகுதிக்கு விரைந்து வந்திருந்தனர்.

# கொழும்பு சுற்றிவளைப்பில் 110 பேர் கைது செய்யப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகளின் போது - 110 பேர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த நேரத்தில் - 116 ரோந்து நடவடிக்கைகளும், 103 திடீர் வீதித் தடைச் சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களுக்கும் அதிகாரம் தேவை என்கிறார் ஹக்கீம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் முஸ்லிம்கள் அதிகமாக உள்ள பகுதிகளில், முஸ்லிம்களுக்குப் போதுமான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இடைக் கால நிர்வாகத் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஹக்கீம், நாம் தமிழருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயார். ஆனால், அவர்கள் எம்மை ஆதிக்கம் செய்வதை ஏற்கமுடியாது எனவும் தெரிவித்தார்.

இவ்விவகாரம் தொடர்பாக தாம் கடந்த திங்களன்று பிரதமரைச் சந்தித்து உரையாடியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இந்திய சாஸ்திரியார் வருகை

முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்

புகழ்பெற்ற S.N.குமாரசாமி அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றமின்மை, கல்வித் தடையா?, குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.

(காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்

T.P - 077 6080660 இல. 711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

2226188 (யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

(சி-1245)

# பீல்ட் பைக் அணியின் மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் காயம்

(வடமராட்சி)

பீல்ட் பைக் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் மோதியதில், சிறுவன் ஒருவன் காயமடைந்த நிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் - அதே இடத்தைச் சேர்ந்த யோகராசா கலைச்செல்வன் (வயது 14) என்ற சிறுவனே காயமடைந்தவனாவான் (09)

# ஓமந்தையில் மத்திய ம.வி. மீண்டும் ஆரம்பம்

ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கைக் காலத்தில் சேதமடைந்த ஓமந்தை மத்திய மகாவித்தியாலயம், ஆறு ஆண்டுகளின் பின்னர் நேற்று முன்தினம் மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்தது. இங்கு தற்காலிகமாக ஆரம்பப் பிரிவு வகுப்புக்களை மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான - சிவசக்தி ஆனந்தன், இரா.குகனேஸ்வரன் ஆகியோர் இணைந்து, வைபவரீதியாக வித்தியாலய மண்டபத்தைத் திறந்து வைத்தனர். இந்தப் பாடசாலை, இடம்பெயர்ந்து குஞ்சுக்குளத்தில் 500 மாணவர்களுடன் கடந்த ஆறு ஆண்டு காலமாக இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆறாயிரம் குடும்பங்களுக்கே நிதியுதவி

யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்ந்துள்ள ஆறாயிரம் குடும்பங்களுக்கே, மீளக்குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி திறக்கப்பட்ட பின்னர், வன்னியிலிருந்து வந்து, யாழ். குடாநாட்டில் மீள்குடியமர்ந்த ஆறாயிரம் குடும்பங்களுக்கே மேற்படி 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

மீளக்குடியமர்ந்தவர்களுக்கான 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவினை வழங்குவதற்கான நிதி கிடைத்த பின்னரே, ஏனைய குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## புலிகளின்...

தேவை. தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் அரசாங்கம் தயாராக இருக்கின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை மேலும் சீராக அமுல்படுத்துவதற்கு, இருதரப்பும் நடவடிக்கை எடுக்கவுள்ளன. இடைக்கால நிர்வாகம் குறித்த பேச்சுவார்த்தையில், முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. இது தொடர்பாக - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் அரசாங்கம் பேசியிருக்கின்றது.

அரசாங்கத்திற்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒருபோதும் முறிவடையாது. பேச்சுவார்த்தைகளைத் தொடரும் வகையில், அரசாங்கம் - நோர்வேயுடன் நெருக்கமான தொடர்பைக் கொண்டிக்கிறது எனப் பீரிஸ் தெரிவித்தார்.

அத்துடன் - இடைக்கால நிர்வாகம் பற்றிய நகல் சட்ட யோசனைகள் குறித்து, ஜனாதிபதிக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். (200)

## உயர் அழுத்த மார்க்க

# மின் தாக்குதலில் இருந்து உயிர் தப்பினான் சிறுவன்

(யாழ்ப்பாணம்)

மின்கம்பியில் சிக்கிய பட்டத்தை எடுப்பதற்கு முற்பட்ட சிறுவனை, மின்சாரம் தாக்கியபோதும், மயிரிழையில் உயிர்தப்பிய சம்பவமொன்று- நேற்று மானிப்பாய், கட்டுடைப் பகுதியில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், அதே இடத்தைச் சேர்ந்த இராசதுரை குணராசா (வயது 16) என்ற சிறுவனே, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மேற்படி சிறுவன், வயல்வெளியில் நின்று பட்டம் ஏற்றியபோது, பட்டம் 33 ஆயிரம் கிலோ வோல்ற் மின்சாரம் செல்லும் கம்பியில் சிக்கியது.

இதனையடுத்து மின்கம்பத்தில் ஏறிப் பட்டத்தை எடுக்க முற்பட்ட வேளையிலேயே - சிறுவனுக்கு மின்சாரம் தாக்கி நிலத்தில் விழுந்தான். எனினும், அதிஷ்டவசமாக உயிராபத்தின்றி இச்சிறுவன் தப்பியுள்ளான்.

# வற் வரி மூலம் நிதியை திரட்ட முடியவில்லை!

## திறைசேரிப் பணிப்பாளர் கூறுகிறார்

(கொழும்பு)

இந்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கத்தினால் பெறுமதிசேர்க்கப்பட்ட வரி (வற்) மூலம் திரட்டப்படத் திட்டமிடப்பட்டிருந்த தொகையில் - இரண்டாயிரம் கோடி ரூபாவைத் திரட்டிக் கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக, திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

திறைசேரிச் செயலாளர் சரித்த ரத்வத்த விடுத்துள்ள அறிக்கை தொடர்பாக, அரசாங்கப் பேச்சாளர் அலுவலகம் தகவல் வெளியிடுகையில் -

பெறுமதி சேர்க்கப்பட்ட வரிமூலம் சேர்ப்பதற்கு எதிர்பார்த்த இலக்கில் இருந்து, 2000 கோடி ரூபா குறைவது தெரியவந்துள்ளது.

இதனால், இந்த வருமானத்தை நம்பி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களைக் கைவிடுவது அல்லது வேறு விசேட வரிமூலம் - அடுத்த ஆறு மாதங்களில் தேவையான நிதியை அறவிடுவது ஆகிய இரண்டு மாற்றுவழிகளே அரசுக்கு உள்ளன.

இது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காகத் திறைசேரி அதிகாரிகள் - அடுத்த வாரத்துக்குள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளுடன் பேச்சை...

தைக்கு முன்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாக சபை ஒன்று அமைக்கப்பட வேண்டியது அவசியம், என்றும் சுட்டிக்காட்டிய பிரிட்டிஷ் தூதுவர்-

வடக்கு கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்தியில் - பிரிட்டிஷ் அரசு விசேட கவனம் செலுத்தவுள்ளதாகவும் பிரதமரிடம் தெரிவித்தார்.

இச்சந்திப்புத் தொடர்பாக பிரிட்டிஷ் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையில் பிரிட்டிஷ் அரசு கவனமாக உள்ளதாகவும், புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை பிரிட்டிஷ் தூதுவர் சந்திக்கவுள்ளதாகவும் கூறினார்.

## புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள...

யோரும் கலந்துகொண்டிருந்தனர்.

திருமலை, குரங்குப்பாஞ்சானில் புலிகள் புதிதாக முகாம் அமைத்த பகுதி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள்ளேயே இருப்பதாகவும், இதற்கான ஆதாரங்களை அவர்கள் சமர்ப்பித்திருப்பதாகவும் குறிப்பிட்டதுடன், 'இன்னும்- இது குறித்துப் பரிசீலிக்க வேண்டியிருப்பதாகவும் பிரதமரிடம், ரெலவ்சன் எடுத்து விளக்கினார்.

அத்துடன்- படையினர் போர் நிறுத்த உடன்பாட்டை மீறிவருவதாக, தமிழ்ச்செல்வன் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பாகவும் ,

கடற் புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை முன்வைத்த - புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கடற்பரப்பை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்பாகவும், ரெலவ்சன் - பிரதமரிடம் எடுத்துக் கூறினார்.

புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட இந்தக் கருத்துக்கள் குறித்து, அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என, ரெலவ்சன், பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க -

இந்த விடயங்கள் குறித்துப் பரிசீலனைகளைச் செய்து- விரைவில் முடிவுகளை அறிவிப்பதாகவும்,

இது குறித்துப் புலிகளுடன் மேலும் பேச்சுக்களை நடத்தவேண்டியிருப்பதாகத் தெரிவித்ததாகவும், கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் நேற்றுத் தகவல் வெளியிட்டன.

இதேவேளை - கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ரெலவ்சன் மீண்டும் வன்னிக்குச் செல்லவுள்ளதாகவும், அங்கு - கடற்புலிகளின் தளபதியையும், அரசியற்துறைப் பொறுப்பாளரையும் அவர் சந்திக்கவிருப்பதாகவும் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (200)

## திருமலையில்...

திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து - கொல்லப்பட்டவரின் சடலத்தை பொலிஸார் எடுத்துச்சென்று, திருகோணமலை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

கொல்லப்பட்ட நபர், இராணுவத்தினருக்கு இரகசியத் தகவல்களை வழங்கி வந்தவர் எனக் கூறப்படுகின்றது.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.